விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 319 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 17 வெள்ளிக்கிழமை (03.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

மலிவு விற்பனை
தீபாவளியை முன்னிட்டு 04.11.2023 முதல் 11.11.2023 வரைஎமதுநிலையத்தில் வாங்கப்படும். அனைத்து புடைவைகளுக்கும் 5% விற்பனை கழிவு வழங்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். SALE
லைடன் பிடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C-7546) 021 222 2381

## சீனத் தூதுக்குழு திங்கள் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழு யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் 06ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ள இந்தக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் யாழ்.மாநகர 02

## திருக்கோணேஸ்வரத்தை பெருங்கோயிலாக புனரமைக்க இந்தியா உதவி செய்யும்

### திருமலையில் இந்திய நிதி அமைச்சர் சீதாராமன்



(திருகோணமலை)

திருக்கேதீஸ்வரத்தைப் புனரமைத்துத் தந்தமை போல் பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்தையும் பெருங்கோயிலாகப் புனரமைக்கும் திட்டம் முன்வைக்கப் 15

# இந்திய நிதி அமைச்சருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

## இரு தரப்பு ஒப்பந்தமும் கைச்சாத்து

(கொழும்பு)

**இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.**

**இதன்போது இலங்கை - இந்தியா இடையே இரு தரப்பு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.**

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே உள்ளிட்ட இந்திய தூதுக் குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இச்சந்திப்பு கொழும்பு ஜனாதிபதி மாளிகையில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் இடையில் நடைபெற்ற இருதரப்பு பேச்சு வார்த்தையில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கத் 02

## வட மாகாணத்தில் அதிபர் III நியமனங்கள் பெறுபவர்கள் விபரங்கள்

08ஆம் பக்கம் பார்க்க

வரி அதிகரிக்கப்பட்டது

## நாட்டை ஸ்திரப்படுத்த

### ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

நாட்டை ஸ்திரப்படுத்த வற் வரி அதிகரிக்கப்பட்டது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாமரைத் தடாக அரங்கத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற தொழிற்சாலைகளுக்கான, தேசிய கைத்தொழில் விருது விழா - 2023 இல் கலந்து கொண 02

## எரிபொருட்களின் விலை அதிகரிக்கும் அபாயம்

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

நாட்டில் எரிபொருட்களின் விலை அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தனியார் வானொலி நிகழ்ச்சியொன்றில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காசா பகுதியில் மோதல்கள் தொடர்ந் 15

## வடக்கு வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இன்று வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து சனிக்கிழமை காலை 8 மணி வரை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று முதல் மாகாண ரீதியாக அடையாள வேலை நிறுத்த தொழிற்சங்க போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக் குறிப்பில், நாங்கள் பல மாதங்களாக வைத்தியர்கள்நாட்டை விட்டு வெளியேற 15

## வரி அதிகரிப்பால் பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமடையும்

### உதய கம்மன்பில எச்சரிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்தின் மறைமுக வரி அதிகரிப்பின் ஊடாக இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமடைவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று தூய ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற 15

## பொருளாதார மீட்சிக்கு சீர்திருத்தங்கள் அவசியம்

### உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் பொருளாதார மீட்சி மற்றும் பேண்தகு வளர்ச்சிக்காக சீர்திருத்தங்களை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த உலக வங்கியின் செயற்பாடுகளுக்கான முகாமைத்துவ பணிப்பாளர் அனா பியடேய் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது நான்கு நாள் விஜயத்தை முடித்துக் கொண்ட உலக வங்கியின் செயற் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சித்தங்கேணியில் வீடு புகுந்து கொள்ளை

யாழ். சித்தங்கேணியில் வீட்டின் புகைக் கூண்டின் ஊடாக உட்புகுந்த திருட்டு கும்பல் வீட்டில் இருந்த 6 பவுண் நகை மற்றும் 30 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை திருடி சென்றுள்ளது.

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியான சித்தன்கேணி பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை புகுந்த கும்பலே திருட்டில் ஈடுபட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதன் போது, திருட்டு கும்பல் வீட்டின் புகைக் கூட்டின் ஊடாகவே வீட்டினுள் நுழைந்து திருட்டில் ஈடுபட்டு உள்ளதாகவும், தடயங்களின் அடிப்படையில் வீட்டினுள் இருவர் நுழைந்து இருக்கலாம்,

வேறு சிலர் வீட்டின் வெளியே பாதுகாப்புக்கு நின்று இருக்கலாம் என சந்தேகிக்கப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# மலையக மக்களுக்கு மேலும் 10 ஆயிரம் வீடுகள்

## இந்தியா அறிவிப்பு

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் 4ஆம் கட்டத்தின் ஒரு பகுதியாக, மலையக தோட்டத் தொழிலாளர்களுக்காக மேலும் 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டத்தை இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில் நேற்று பிற்பகல் "மலையகம் 200" நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய போதே இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இவ்வாறு கூறினார்.

வீடமைப்புத் திட்டத்தின் "கட்டம் 3" வெற்றியைப் பாராட்டிய அவர், இந்தியாவின் முதன்மையான அபிவிருத்தித் திட்டமாக இது உள்ளதுடன், தோட்டத் தொழிலாளர்களுக்காக மேலும் 10,000 வீடுகள் கட்டித்தரப்படும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

இந்திய வீட்டுத்திட்டத்தின் மூன்றாம் கட்ட வெற்றி குறித்து கருத்து தெரிவித்த நிதியமைச்சர், திட்டத்தின் கீழ் அமைக்க ஒப்புக் கொள்ளப்பட்ட 4,000 வீடுகளில் 3,700 வீடுகள் ஏற்கனவே பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இரு நாட்டு உறவில் தனிப்பட்ட முறையில் எனக்கும் இது ஒரு சிறப்பான தருணமாக உள்ளது.

'நாம் 200' கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, திட்டத்தின் '4ம் கட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள 10 ஆயிரம் வீடுகளில் முதல் வீட்டுக்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் சீதாராமன், இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் அசைக்க முடியாத ஆதரவை மேலும் எடுத்துரைத்தார். (ம-7)


மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



நல்லூர் சாரங்கம் இசை மன்ற இயக்குநரும் ஓய்வுபெற்ற இசை ஆசிரியருமான

திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்

இன்றைய தினம் (2023.11.03) நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறுகின்ற வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் பண்பாட்டுப் பெருவிழாவில் "கலைஞானச் சுடர்" விருதைப் பெறும் எமது மதிப்பிற்குரிய திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்களை மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரா, திருமதி சாவித்திரிதேவி ரவிச்சந்திரன், திருமதி அபிராமி சுதன்

(17653)



EXAM TO QUALIFY AS PHARMACIST

இவ்வாண்டுக்கான மருந்தியலாளர் பதிவிற்கான பரீட்சை 16.12.2023 ஆம் திகதி கொழும்பில் மருத்துவ கல்லூரியில்(CMCC) நடாத்தப்படுகிறது. இப் பரீட்சைக்கான நேரடி வகுப்புகள் யாழ்ப்பாண கல்லூரி(வெளிவாரி பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதியில் சனி/ஞாயிறு கிழமைகளில் காலையில் நடைபெறுகின்றது. பரீட்சைக்கான Zoom/Online வகுப்புகள் சனி/ஞாயிறு இரவில் நடைபெறுகிறது.

2026 ஆம் ஆண்டிற்கான மருந்தியலாளர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தற்போது SLMC Website இல் Apprentice Pharmacist Registration Application ஏற்றுக்கொள்ளப்பட்டு மாசி மாதம் 2024 ஆம் மாதத்தில் interview SLOT வழங்கப்பட்டு வருகிறது. GCE A/L இல் இரசாயன பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

(C-7545)

மேலதிக விபரங்கள் : Nehru Sir 077 316 4251



கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் ஆயுட்கால உறுப்பினரும் நிலையத்தின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியவருமான சிவநாதன் உசங்கர் அவர்களின் அன்புத் தாயார்

கோகிலா சிவநாதன்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் (K.C.C.C & K.C.C.C.S.C)

(C-7547)


## நாட்டை...

டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வற்" வரியை 18% அதிகரிப்பதற்கான தீர்மானத்தை தானோ அல்லது அமைச்சரவையோ விருப்பத்துடன் மேற்கொள்ளவில்லை என்றும், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பேணுவதற்காகவே அந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மக்களுக்கு உண்மையை கூறி நாட்டுக்கான தீர்மானங்களை மேற்கொள்வதே தலைமைத்துவப் பண்பாகும் என்றும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேர்தல் நெருங்கி வரும் தருவாயில் கடினமான தீர்மானங்களை மேற்கொள்வது பாராளுமன்றத்திற்கு மேலும் நெருக்கடியாக அமையும் என்றும் தெரிவித்தார். (ம-7)

## பொருளாதார...

பாடுகளுக்கான முகாமைத்துவ பணிப்பாளர் அனா பியடேய் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனை குறிப்பிட்டுள்ளார்.

அனா பியடேய் தனது விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில், அமைச்சரவை அமைச்சர்கள், எதிர்க்கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், தனியார் துறை மற்றும் அபிவிருத்திப் பங்காளி அமைப்புகளின் பிரதிநிதிகளையும் உலக வங்கி செயற்றிட்டங்களின் பயனாளிகளையும் சந்தித்துகலந்துரையாடினார்.

முகாமைத்துவப் பணிப்பாளர் இலங்கை விஜயத்தின்போது வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் விவசாயம், சுகாதாரம், காலநிலை மாற்றம், தனியார் துறை அபிவிருத்தி, பெண்களை நிதி ரீதியாக உள்ளடக்குதல் என்பன தொடர்பாக உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களையும் பார்வையிட்டார்.

"இலங்கை முகங்கொடுக்கும் சவால்கள் பற்றி நான் எனது விஜயத்தின்போது அறிந்துகொண்டேன். தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள் நாட்டிலிருந்து வெளியேறுகின்றனர். காலநிலை மாற்றத்தை சமாளிக்க முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். முதலீடுகள் மற்றும் கடன் வசதிகளின் பற்றாக்குறையால் தொழில் முயற்சியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், அதேவேளை காலநிலைக்கு ஈடுகொடுக்கும் விவசாய முறைகளை அதிகரித்தல், புதுப்பிக்கக்கூடிய சக்தியை பயன்படுத்துதல், தொழில் முயற்சியாண்மையை மேம்படுத்துதல், போட்டித் தன்மை மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல், மக்களின் பங்கேற்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்கு நிறைய வாய்ப்புகள் இருப்பதையும் நான் கண்டுகொண்டேன்" என்று அனா பியடேய் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதார மீட்சிப் பயணத்தில் உதவுவதற்கும், விவசாயிகளைச் சந்தைகளுடன் தொடர்புபடுத்தவும் சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகளை பலப்படுத்தவும் புத்துருவாக்கத்தை மேம்படுத்தவும் உட்கட்டமைப்பு முதலீடுகளினூடாக மாற்றத்தை ஏற்படுத்தவும், சிறந்த தொழில் வாய்ப்புகளை பெண்கள், இளைஞர்களுக்காக உருவாக்கவும் உலக வங்கி தொடர்ச்சியாக இலங்கைக்கு உதவி செய்யும்" என்று தெரிவித்தார். (ம-7)

## இந்திய...

தின் 15 மில்லியன் டொலர் அன்பளிப்புடன் முன்னெடுக்கும் திட்டங்கள் தொடர்பான இருதரப்பு ஒப்பந்தம் பரிமாறப்பட்டது. (ம-7)

## சீனத்தூது...

சபை ஆணையாளர் ஆகியோருடன் உத்தியோக பூர்வ சந்திப்புகளை மேற்கொள்ளவிருப்பதுடன், சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் நலனோம்புத் திட்டங்களையும் நேரில் சென்று பார்வையிடத் திட்டமிட்டிருப்பதாகச் சீனத் தூதரக வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

இதேநேரம், இலங்கைக்கான சீனத் தூதுவர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேருக்கு மாதாந்தம் ரூபா 6,500 படி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சீனத் தூதுவரின் யாழ்ப்பாண விஜயத்துக்கான நிகழ்ச்சி நிரலில் யாழ். பல்கலைக்கழக விஜயம் தவிர்க்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்.ஐ.வி தொற்றால் இதுவரை 43 பேர் உயிரிழப்பு

## தேசிய எயிட்ஸ் தடுப்பு திட்டம் அறிவிப்பு


(கொழும்பு)

**இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கையில் மொத்தம் 485 பேர் எயிட்ஸ் நோயால் பாதிக் கப்பட்டுள்ள அதேநேரம் 43 இறப்புகளும் பதிவாகி யுள்ளன.**

இதற்கிடையில் நாடு முழுவதும் உள்ள 41 நிலையங்களில் இலவசமாக எச்.ஐ.வி பரிசோதனை மேற்கொள்ள முடியும் என பொதுமக்களுக்கு தேசிய எயிட்ஸ் தடுப்பு திட்டம் அறிவித்துள்ளது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் எச்.ஐ.வி தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள போதிலும், புதிய நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

இலங்கையில் தற்போது 5,496 பேர் எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் 4,095 பேர் ஆண்கள் என்றும் 1,391 பேர் பெண்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)




# ஒக்டோபரில் பணவீக்கம் 1.5 சதவீதமாக அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த செப்டெம்பர் மாதம் 1.3 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம் ஒக்டோபர் மாதத்தில் 1.5 சதவீதமாக சொற்ப அளவினால் அதிகரித்துள்ளது.

அதன்படி, கடந்த செப்டெம்பர் மாதத்தில் 5.2 சதவீதமாகப் பதிவான உணவுப்பணவீக்கம் ஒக்டோபரில் மாற்றமின்றி அதே மட்டத்தில் காணப்பட்டதுடன், செப்டெம்பரில் 4.7 சதவீதமாகப் பதிவான உணவல்லாப்பணவீக்கம் ஒக்டோபரில் 4.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பொருளாதாரத்தின் அடிப்படைப்பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் கடந்த செப்டெம்பர் மாதத்தில் பதிவான 1.9 சதவீதத்திலிருந்து ஒக்டோபரில் 1.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் உறுதியான பணவீக்க எதிர்பார்க்கைகள் மூலம் பணவீக்கமானது நடுத்தரகாலத்தில் 5 சதவீதம் எனும் இலக்கிடப்பட்ட மட்டத்தை அடையுமென எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி-5-6)

# ரயில் சாரதிகளுக்கு பற்றாக்குறை

(கொழும்பு)

புகையிரத திணைக்களத்தில் தற்போது 150 புகையிரத சாரதிகள் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ரயில் போக்குவரத்தில் கடும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய ரயில் சாரதிகளை இணைத்துக் கொண்டாலும், அவர்களை சரியான சாரதியாக மாற்றுவதற்கு சுமார் 4 வருடங்கள் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார். (நி-5-6)

# காசாவிலிருந்து எகிப்திற்கு செல்வதற்கு 17 இலங்கையர்களிற்கு அனுமதி

(காசா)

17 இலங்கையர்களிற்கு ரஃபா எல்லை ஊடாக காசாவிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காசா எல்லை ஊடாக வெளியேற்றம் தொடர்பான அதிகாரசபை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

எகிப்திற்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படும் 15 நாடுகளை சேர்ந்த 596 பேரின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

அவர்களில் 17 இலங்கையர்களின் பெயர் விபரங்களும் காணப்படுகின்றன. (நி-5-6)

# பணமோசடி வழக்கு நாமல் உள்ளிட்டவர்கள் விடுதலை

(கொழும்பு)

கோவர்ஸ் கார்ப்பரேட் சர்வீசஸ் நிறுவனம் சம்பந்தப்பட்ட வழக்கில் இருந்து நாமல் ராஜபக்ஷ உட்பட அனைத்து பிரதிவாதிகளையும் விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு, குறித்த நிறுவனத்தின் ஊடாக நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் 30 மில்லியனை முறைகேடாக சம்பாதித்ததாக குற்றம் சாட்டி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# திருக்கோணேஸ்வரம் சென்று சிவனைத் தரிசித்த இந்திய அமைச்சர்



(திருமலை)

திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று காலை திருக்கோணேஸ்வரம் கோயிலில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, சிவபூமி அறக்கட்டளை அமைப்பாளர் கலாநிதி. ஆறு. திருமுருகன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (நி-5-6)

## பௌத்த பிக்குகளுடன் இணைந்து

# வணக்கத்தலங்களை அபகரிக்கும் முயற்சியில் தொல்பொருள் திணைக்களம்

## அமெரிக்க ஆணைக்குழு சுட்டிக்காட்டு

(வோஷிங்டன்)

தொல்பொருள் திணைக்களமானது நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் அப்பிரதேசங்களிலுள்ள கட்டமைப்புக்கள் மற்றும் பௌத்த பிக்குகளுடன் இணைந்து இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் வணக்கத்தலங்களைக் கைப்பற்றுவதற்கு வசதி ஏற்படுத்துகின்றது என சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, நாட்டில் வாழும் சிறுபான்மையின இந்து, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கான மத சுதந்திரத்தை உறுதிசெய்யும் வகையில் அரசாங்கமானது தற்போது நடைமுறையிலுள்ள "ஒடுக்குமுறை" கொள்கைகள் மற்றும் சட்டங்களை முற்றாக நீக்கவோ அல்லது திருத்தியமைக்கவோ நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த ஆணையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழுவின் ஆணையாளர்களான ஸ்டீஃபன் ஸ்னெக் மற்றும் டேவிட் கெரி ஆகியோர் கடந்த மாதம் இலங்கைக்கு வருகைதந்திருந்ததுடன் கொழும்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டு மத சுதந்திரம் தொடர்பில் நிலவும் கரிசனைகள் பற்றி ஆராய்ந்தனர்.

அது மாத்திரமன்றி சர்வ மதத்தலைவர்கள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசாங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடல்களையும் முன்னெடுத்திருந்தனர்.

இலங்கை அரசாங்கம் மிகவும் மோசமான பயங்கரவாதத்தடைச்சட்டம் மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டம் போன்றவற்றைப் பயன்படுத்தி மத சிறுபான்மையினரைத் தன்னிச்சையாகத் தடுத்துவைப்பது குறித்து தாம் தொடர்ந்து தீவிர கரிசனை கொண்டிருப்பதாக சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

# அதிகரிக்கும் டெங்கு நோய்

(கொழும்பு)

இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் மாத்திரம் டெங்கு நோயினால் 32 மரணங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அறிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 68,497 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்தியா அபார வெற்றி







உலகக் கோப்பை 2023 கிரிக்கெட் தொடரின் 33ஆவது லீக் போட்டியில் இந்தியா மற்றும் இலங்கை அணிகள் மோதின. இந்த போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது. பேட்டிங்கில் இந்திய அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. இந்திய அணி கப்டன் ரோகித் சர்மா வெறும் 4 ரன்கள் எடுத்த நிலையில் பெவிலியன் திரும்பினார்.

இவருடன் களமிறங்கிய சுப்மன் கில் சிறப்பாக விளையாடி 92 ரன்களை குவித்தார். அடுத்து களமிறங்கிய விராட் கோலி 88 ரன்களில் ஆட்டமிழந்தார். இவருடன் ஆடிய ஸ்ரேயஸ் அய்யர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர் 82 ரன்களை எடுத்த போது அவுட் ஆனார்.

கே.எல். ராகுல் 21 ரன்களில் ஆட்டமிழக்க, சூர்யகுமார் யாதவ் 12 ரன்களில் பெவிலியன் திரும்பினார். போட்டி முடிவில் இந்திய அணி 8 விக்கெட்டுகளை இழந்து 357 ரன்களை குவித்தது. இலங்கை சார்பில் தில்ஷான் மதுஷங்கா 5 விக்கெட்டுகளையும், துஷமந்தா சமீரா 1 விக்கெட் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பமே பேரதிர்ச்சி காத்திருந்தது. இந்திய வீரர் பும்ரா வீசிய முதல் பந்திலேயே விக்கெட் வீழ்த்தினார். இதே போன்று சிராஜ் வீசிய முதல் ஓவரின் முதல் பந்திலேயே விக்கெட் எடுத்தார். தொடர்ந்து சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்திய இந்திய வீரர்களால் இலங்கை அணி 3 ரன்களில் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இலங்கை அணி வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ரன்களில் பெவிலியன் திரும்பினர். அந்த அணியின் ஏஞ்சலோ மத்யூஸ் மட்டும் பொறுமையாக ஆடினார். இவரும் 12 ரன்களில் அவுட் ஆனார். இதன் மூலம் இந்திய அணி 19.4 ஓவர்களில் வெறும் 55 ரன்களை விட்டுக் கொடுத்து இலங்கை அணியின் அனைத்து விக்கெட்டுகளையும் கைப்பற்றியது.

போட்டி முடிவில் இந்திய அணி 302 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இந்தியா சார்பில் முகமது சமி 5 விக்கெட்டுக்களையும், முகமது சிராஜ் 3 விக்கெட்டுகளையும், பும்ரா மற்றும் ஜடேஜா தலா 1 விக்கெட் வீழ்த்தினர். நடப்பு உலகக் கோப்பை 2023 கிரிக்கெட் தொடரில் இந்திய அணி இதுவரை விளையாடிய ஏழு போட்டிகளிலும் வெற்றி பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

போட்டியின் ஆட்டநாயகனாக முகமது சமி தெரிவானார். (ம-7)

# விராட் கோலி புதிய சாதனை



இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி, மற்றுமொரு குறிப்பிடத்தக்க சாதனையை படைத்துள்ளார்.

இந்த ஆண்டில் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 1000 ஓட்டங்களைக் கடந்த 3ஆவது இந்திய வீரராக விராட் கோலி பதிவாகியுள்ளார்.

முன்னதாக இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர்களான சுப்மன் கில் மற்றும் ரோஹித் சர்மா ஆகியோர் இந்த ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களை கடந்திருந்தனர்.

இதனைத் தவிர இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான பத்தும் நிஷ்ஷங்கவும் இந்த ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களை கடந்த வீரராக பதிவாகியுள்ளார்.

இலங்கை அணிக்கெதிராக நேற்று நடைபெற்ற உலகை கிண்ண கிரிக்கெட் தொடரில் ஆயிரம் ஓட்டங்களை விராட் கோலி கடந்துள்ளார்.

விராட் கோலி இந்த ஆண்டு தனது 23 ஆவது போட்டியில் 1000 ஓட்டங்களை எட்டினார். 34 வயதான விராட் கோலி, சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக தடவைகள் 1000 ஓட்டங்களை கடந்த சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்துள்ளார்.

கடந்த 2011, 2012, 2013, 2014, 2017, 2018, 2019 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இந்த சாதனையை எட்டியதன் மூலம், கிரிக்கெட்டில் எட்டாவது முறையாக ஆண்டு ஒன்றில் 1000 ஓட்டங்களை கடந்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கர், குமார் சங்கக்கார மற்றும் ரிக்கி பொண்டிங் போன்ற ஜாம்பவான்களுக்குப் பின்னர், சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் மொத்தம் 26,000 ஓட்டங்களை எட்டிய நான்காவது துடுப்பாட்டவீரர் என்ற பெருமையை விராட் கோலி பெற்றார்.

கடந்த 15 ஆண்டுகளாக இந்திய துடுப்பாட்ட வரிசையில் முதுகெலும்பாக இருந்துவரும் விராட் கோலியின் இந்த சாதனையானது, கிரிக்கெட் வரலாற்றில் மிகச் சிறந்த வீரர்களில் ஒருவர் என் பதை எடுத்துக்காட்டியுள்ளது. (ம-7)




## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023
## புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 7 | 7 | 0 | 14 |
| 2 | தென்னாபிரிக்கா | 7 | 6 | 1 | 12 |
| 3 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 8 |
| 4 | நியூசிலாந்து | 7 | 4 | 3 | 8 |
| 5 | பாகிஸ்தான் | 7 | 3 | 4 | 6 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 6 | 3 | 3 | 6 |
| 7 | இலங்கை | 7 | 2 | 5 | 4 |
| 8 | நெதர்லாந்து | 6 | 2 | 4 | 4 |
| 9 | பங்களாதேஷ் | 7 | 1 | 6 | 2 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 2 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு விவகாரங்களில் அரசாங்கம் பக்கச்சார்பற்று செயற்படவேண்டும்

## அஸ்கிரிய பீடம் வலியுறுத்து

**(கொழும்பு)**

**வடக்கு - கிழக்கு விவகாரங்களில் அரசாங்கம் பக்கச்சார்பற்ற முறையில் செயற்பட வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் கலாநிதி மதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.**



பௌத்த பிக்குகள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு முன்னர் வடக்கு - கிழக்கு தொடர்பான விவகாரங்களை கையாளும் போது பக்கச்சார்பற்ற விதத்தில் அவை கையாளப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டி உள்ளார். அம்பிட்டியே தேரரின் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது

மூன்று தசாப்த கால போர் இடம்பெற்ற காலத்தில் வாழ்ந்த அந்தப் பிரதேச மக்களது குரல்களுக்கு அரசாங்கமும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்பினரும் உரிய முறையில் செவிசாய்க்கவில்லை என்று தென்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பௌத்தப் பிக்குவின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அந்தப் பகுதி மக்களின் பிரச்சினைகளை தீர்மானிக்க வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார்.

அம்பிட்டியே சுமனரத்ன தேரரின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும் அவரும் அவர் சார்ந்த சமூகமும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் காரணமாக அவர் அவ்வாறு செயற்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பிரச்சினைக்கு தற்போது அரசாங்கம் மட்டும் காரணம் அல்ல எனவும் கடந்த கால அரசாங்கங்களும் இந்த பிரச்சினையை கருத்தில் கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# நாட்டில் தொடரும் மருந்துகளுக்கான தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் சுகாதாரத்துறையில் நிலவிவரும் பிரச்சினைகள் சரிசெய்யப்பட்டு வந்தாலும், 217 மருந்துகளுக்கான பற்றாக் குறை தொடர்ந்தும் நிலவி வருகிறது என்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சுமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,இலங்கையில் மருந்துகளுக்கு நிலவி வந்த பற்றாக்குறை குறைவடைந்துள்ள போதிலும் இன்னும் சில அத்தியாவசிய மருந்துகளுக்கான பற்றாக் குறை தொடர்ந்து வருகின்றது.

இந்த இடைவெளியை நிவர்த்தி செய்து எதிர்வரும் மாதங்களில் பற்றாக்குறையை 100 இற்கு கீழ் குறைப்பதற்கு தேவையான முயற்சிகளை சுகாதார அமைச்சு முன்னெடுத்து வருகிறது.

ஆனால் 14 உயிர்காக்கும் மருந்துகள் உட்பட அத்தியாவசிய மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு இல்லை எனவும் ரத்நாயக்க இதன் போது உறுதியளித்தார். (நி-5-6)

# ஒரு மாதத்தில் மட்டும் ஒரு லட்சம் சுற்றுலா பயணிகள்

(கொழும்பு)

கடந்த ஒக்டோபர் மாதத்தில் மொத்தம் 100,199 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தசாதனையானது, அண்மைய ஆண்டுகளில் உலகளாவிய தொற்று நோய் மற்றும் பிற சவால்களின் விளைவுகளுடன் போராடி வரும் இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு ஒரு நம்பிக்கைக்குரிய மீட்சியைக் குறிப்பதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# கைத்தொழில் துறையினருக்கு வங்கிக் கடன் சலுகைகள்

## ஜனாதிபதி தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறையினருக்கு வங்கிக் கடன் சலுகைகளை வழங்க உத்தேசித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்றதொரு நிலைமைக்கு நாடு தள்ளப்படாமல் தடுப்பது தனது பொறுப்பு என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சவால்கள் இருந்த போதிலும் நாட்டுக்காக சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் திறம்பட அமுல்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# இராசிபலன்

03.11.2023
ஐப்பசி 17,வெள்ளிக்கிழமை
சஷ்டி பின்னிரவு 1.44 மணிவரை
திருவாதிரை முற்பகல் 9.04 மணிவரை

சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை

சந்திராஷ்டமம்
கேட்டை

வளவன்




தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், சகோதர வழியில் ஒற்றுமை கூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.





எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், அம்பிகை வழிபாடு இன்பம் தரும், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.





பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தடைகள் விலகி காரியங்கள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.





மாற்றுக் கருத்து-டையோர் மனம்மாறுவர், உற்சாகத்தோடு பணி புரியும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும்.





பொது வாழ்வில் புகழ் கூடும், உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், நிதி நிலை உயரும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.





தூரதேசப் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.





வரவைக் காட்டிலும் செலவுகள் கூடலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.





வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைறெும், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.





இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி கூடும், திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம்.




அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கனவுப் பலிதமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, உறவினர் சிலரைத் தேடிச் சென்று சந்திப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.




தொழில் ரீதியாக வர வேண்டிய வாய்ப்புகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியில் ஆணவம் கொண்டவன் தோல்வியை அருகே அழைக்கின்றான்

# வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள்






(யாழ்ப்பாணம்)
நாடு முழுவதும் 17 பல்கலைக் கழகங்களில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களினால் வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதோடு, மதியம் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முன்றலில் சம்பளப் பிரச்சினைகள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியில் உள்ள குறைவு போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து குறித்த வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-5-6-33)

# கண்ணாடி வழங்கல்

(யாழ்ப்பாணம்)
லயன்ஸ் கிளப்பின் அனுசரணையில் யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் அவர்களின் ஏற்பாட்டில யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் கண் பார்வை குறைபாடுடைய பொலிஸாருக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பொலிஸ் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த கண்ணாடி வழங்கும் நிகழ்வில் 400 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கண்ணாடி வழங்கி வைக்கப்படவுள்ளது.(நி-5-6-33)

# வாகன இலக்கத் தகடுகள் பொதுமக்கள் பார்வைக்காக

(யாழ்ப்பாணம்)
மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலிருந்து யாழ்.மாவட்டச் செயலக காரியாலயத்திற்கு 2023.10.18 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், வாகன உரிமைமாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் மேலதிக விபரங்களை மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

என யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.சிவகரன் அறிவித்துள்ளார். (நி-5-6)




# ஆண்டு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)
மல்லாகம் சண்முக நாதன் அறக்கட்டளை அநு சரணையில் தெல்லிப்பழை பிரதேச முதியோர் சங்கம் நடத்தும் நலிவுற்றோர் நல னோன்பு நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் முதியோர் கௌர விப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மல்லாகம் நீதி மன்ற வீதியில் மக்கள் மன்றம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வலி வடக்கு தெல்லிப் பழை பிரதேச முதியோர் சங்கத் தலைவர் வை. சுப்பிரமணியம் ஜே.பி தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விரு ந்தினராக வலி. வடக்குத் தெல்லிப்பழை பிரதேச செயலர் சண்முகராசா சிவ சிறி கலந்து கொள்ளவுள் ளார். (நி-5-6)

## கடலட்டைக்குஞ்சு சந்தைப்படுத்தல்

(குருநகர்)
கடலட்டைக்குஞ்சு சந்தைப்படுத்தல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். குருநகர் கடற்கரை மண்டபத்தில் வி. ஆர். இன்ரர் நைசினல் நிறுவன இயக்குநர் க.ஏ.ஸ்ரீப ன்சன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சரும் யாழ் மற்றும் கிளி.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ள வுள்ளார். (நி-5-6-106)

# சைக்கிளில் பயணித்த நபரை வழிமறித்து கொள்ளை

(கரணவாய்)
சைக்கிளில் சென்ற நபரை வழி மறித்து வழிப் பறி களவில் ஈடுபட்ட கும்பல்.

கரணவாய் பகுதியில் கடந்த 30 ஆம் திகதி நபரொருவர் சைக்கிளில் வீடு நோக்கி முள்ளிவயல் பகுதி ஊடாக பயணித்த வேளை பற்றைக்குள் மறைந்து இருந்து திடீரென வெளியே வந்த கும்பல் ஒன்று இடை நடுவே வழி மறித்து 3200 ரூபா பணம், விலையுயர்ந்த தொலைபேசியினை பறித்து தள்ளிவிட்டுச் சென்றுள்ளனர்.

மேலும் இரவு வேளைகளில் தனியாக பயணம் செய்வோர் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்பதுடன் பொலிஸார் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (நி-5-6-60)

## காக்கைதீவு- சாவற்கட்டு மீனவர்களிடையே ஒப்பந்தம் கைச்சாத்து

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம். காக்கைதீவு மற்றும் சாவற்கட்டு கடற்றொழிலாளர்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இரண்டு தரப்பினருக்கும் இடையில் அண்மைக்காலமாக நிலவிவந்த தொழில்சார் முரண்பாடுகளை தீர்த்து வைக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டுள்ளது.

காக்கைதீவில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் இறங்குதுறை மற்றும் மீன் விற்பனை சந்தை போன்றவற்றை பகிர்ந்து கொள்வதில் முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் சுமூகமான தீர்விற்கு சம்மந்தப்பட்ட இரண்டு தரப்புக் கடற்றொழிலாளர்களும் சம்மதம் தெரிவித்த நிலையிலேயே சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர். மானிப்பாய் பிரதேச சபை செயலாளர். கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஜெ.சுதாகர். காக்கைதீவு மற்றும் சாவற்கட்டு கடற்றொழிலாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். (நி-5-6)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)
திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் சித்திர முத்திரைகள், ஓவிய , கைவினைப் பொருட்களின் கணகாட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இல.128, டேவிற் வீதி, யாழில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இக் கண்காட்சியானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை இடம் பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-5-6)



Us aid இனால் யாழ் மாநகர சபையில் கடந்த நான்கு வருடங்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் திண்ம கழிவு முகாமைத்துவம் சார்ந்த திட்டங்களை மீளாய்வு செய்ய வந்த பிரதிநிதிகள் அண்மையில் யாழ்.மாநகர சபை ஆணையாளரை சந்தித்து கலந்துரையாடினர். (படம்- சிவசாந்தன்)



இந்தியாவின் "இரும்பு மனிதர்" சர்தார் வல்லபபாய் படேலின் 148ஆவது ஜனனதின நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில், மருதடி வீதியில் அமைந்துள்ள துணைத்தூதரக அலுவலகத்தில் துணைத் தூதுவர் நட்ராஜ் ஜெயபாஸ்கர் தலைமையில் இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரும் வரியால் அதிகரிக்கும் பணவீக்கம்

## பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அடுத்தாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வற் வரி விகிதங்களை 18 சதவீதமாக உயர்த்துவது பணவீக்கத்தை அதிகரிக்கலாம் என்று பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகளை விதிப்பதன் மூலம் விலை மட்டங்களை அதிகரிப்பதன் மூலம் பணவீக்கத்தை அதிகரிக்க முடியும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரி அதிகரிப்பினால் நிச்சயமாக பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகரிக்கப்படும் வரி வாடிக்கையாளர்களிடமே அறவிடப்படும். இதனால் விநியோகஸ்தர்கள் அதிகளவில் விலைகளை அதிகரித்து தங்கள் பொருட்களை வழங்குவார்கள்.

இதனை அதிக விலைக்கு வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்ய வேண்டும்.

பெறுமதி சேர்ப்புக்கான வரி விகிதங்களை அதிகரிப்பதன் மூலம் இந்நாட்டின் வறிய மக்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள்.

மேலும் விலை அதிகரிப்பு காரணமாக உலக சந்தையில் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் போட்டித்தன்மையும் பாதிக்கப்படும் என சிரேஷ்ட பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# உலகின் மிகப்பெரிய கேபிபரா எலிகள் தெஹிவளையில்





(கொழும்பு)

செக் குடியரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் கீழ் உலகின் மிகப்பெரிய எலி இனங்களில் ஒன்றான ஒரு ஜோடி கேபிபரா எலிநாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த கேபிபரா எலிகள் தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கேபிபரா எலி தெற்காசிய நாடுகளில் வாழும் அரிய வகை விலங்கினங்களைச் சேர்ந்தது. ஆனால் இலங்கைக்கு உரித்தான விலங்கு அல்ல. நன்கு வளர்ந்த கேபிபரா சுமார் நான்கு அடி உயரம் கொண்டது.

இது தாவர உண்ணி விலங்கு. அதன் ஆயுட்காலம் சுமார் ஆறு ஆண்டுகள் ஆகும் என தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

கேபிபரா எலிகளின் தனிமைப்படுத்தல் காலம் முடிந்து விட்டதாகவும், காட்சிப்படுத்தப் படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(நி-5-6)

# வீதி விபத்துக்களால் 115 சிறுவர்கள் இந்த வருடத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் மாத்திரம் இலங்கையில் வீதி விபத்துக்களினால் 115 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக வீதி விபத்துக்களை தடுப்பதற்கான நிபுணர் குழுவின் தலைவர் பேராசிரியர் சமத் தர்மரத்ன தெரிவித்துள்ளார்.

"பாதுகாப்பான சாலைகள்-பாதுகாப்பான குழந்தைகள்" என்ற சர்வதேச சாலை பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றும் போதே இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் சுமார் 3,000 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழக்கின்றனர். மேலும் இது தொடர்பான போக்கு அதிகரித்து வருகிறது.

இந்தநிலையில், எதிர்காலத்தில் வீதி விபத்துக்களால், உயிரிழப்புகள் மற்றும் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அதிகரிக்கும், இதனால் நாட்டிற்கு கணிசமான பொருளாதார இழப்புக்கள் ஏற்படும் என எச்சரித்துள்ளார். (நி-5-6)


# சேவை நலன் பாராட்டு

திருமதி.

சுதா ஜெயகாந்தன்

(SLTS-I, பயிற்றப்பட்ட தமிழ்)



**சேவை விபரம்**

23.03.1990-11.03.1993

யா/வட்டு மேற்கு அ.மி.த.க பாடசாலை

12.03.1993-13.03.1994

யா/யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்

14.03.1994-31.12.1995

யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை

01.01.1996-03.06.1996

வ/றம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்

04.06.1996-13.01.2014

யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை

14.01.2014-02.11.2023

யா/வட்டு இந்துக் கல்லூரி

Best Wishes

எமது கல்லூரியில் பத்து வருடங்களாக ஆசிரியராக சிறப்பாக பணியாற்றி 03.11.2023 இல் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி.சுதா ஜெயகாந்தன் அவர்கள் ஓய்வுக் காலத்தில் நோய் நொடி இன்றி நலமாக வாழ வேண்டும் என நடராஜப் பெருமானை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்க பல்லாண்டு வாழ்க வளமுடன்

(17625)

வாழ்த்துவோர்: நலன்புரிக்கழகம்,
யா/வட்டு இந்துக்கல்லூரி, சித்தன்கேணி.


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 32, மூளாய் வீதி, 1 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-10

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, வட்டுக்கோட்டை உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம்-10 மூளாய் வீதி 1 ஆம் ஒழுங்கையிலுள்ள இல: 32, ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **திருமதி.மனோன்மணி கந்தையா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **கந்தப்பர் சுப்பிரமணியம் கைம்பெண் சின்னப்பிள்ளை** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 217/19.09.1942 ஆம் இலக்க உறுதியால் **ஆறுமுகம் அம்பலவாணரும், அம்பலவாணர் சின்னத்துரையும், அம்பலவாணர் சுப்பிரமணியமும், அம்பலவாணர் மயில்வாகனமும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**விசுவலிங்கம் நடராசா பெண் நாகம்மா** ஆகியவர் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு **வே.நாகலிங்கம்** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6923/12.10.1943 ஆம் இலக்க உறுதியில் குறித்த **சுப்பிரமணியம் கைம்பெண் சின்னப்பிள்ளை** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கந்தையா நேசமணி** ஆகியவர் குறித்த ஆதனத்தினை இற்றைக்கு கடந்த 50 வருடங்களுக்கு மேலாக எவ்வித இடையூறுமின்றி தன்னாலும், தனது தந்தையாராலும் ஆட்சிசெய்யப்பட்டு வருகின்றது என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு திருமதி.S.கங்காதரன் முகதாவில் 10389/13.08.2010 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்.

**பாலசுப்ரமணியம் சுபாசன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி. S.கங்காதரன், முகதாவில் நிறைவேற்றப்பட்ட 15872/03.03.2021 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தையா நேசமணி** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சண்முகரத்தினம் துவாரகா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி.S.கங்காதரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 15873/03.03.2021 ஆம் இலக்க உறுதியால் குறித்த **பாலசுப்ரமணியம் சுபாசன்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**குமுதினி சற்குணரத்தினம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆன் சுமங்கலா குலநாயகம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 006/24.01.2023 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சண்முகரத்தினம் துவாரகா** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த **குமுதினி சற்குணரத்தினம்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **குமுதினி சற்குணரத்தினம்** ஆகியவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(17644)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் அதிபர் (III) நியமனம் பெறுபவர்களி

1 .K. Thayachandirika-ISLAND
2 S. Romesh-JAFFNA
3 C. Natheeswaran-THENMARACHCHI
4 A.R. Jegan-MANNAR
5 V. Elayaraja-VADAMARACHCHI
6 U. Thusyanthan-WALIKAMAM
7 K. Nishanthan-WALIKAMAM
8 Jayanthan-VADAMARACHCHI
9 S. Sujatheep-JAFFNA
10 A. Gnaneswaran-VAVUNIYA NORTH
11 P. Vijitharan-VAVUNIYA SOUTH
12. G. Tharmathevan-VADAMARACHCHI
13. M. S. Sathiyakeerthi-THENMARACHCHI
14. V. Thirukumaran-VADAMARACHCHI
15. T. Jayaseelan-VAVUNIYA SOUTH
16. V. Sasikaran-VADAMARACHCHI
17. R. Mugunthan-JAFFNA
18. K. Manchula-MULAITHIVU
19. P. Tharmenthira-VAVUNIYA NORTH
20. N. Sanjeepan-KILINOCHCHI
21. R. Tharmaseelan-WALIKAMAM
22. T. Nishanthan-JAFFNA
23. V. Vigneswaran-VAVUNIYA NORTH
24. T. Lintus-JAFFNA
25. S. Krishnakumar-KILINOCHCHI
26. K. Sayantharuban-JAFFNA
27. P. Srikanthan-VADAMARACHCHI
28. S. Sathiyaruban-WALIKAMAM
29. J.T. Edison-JAFFNA
30. S. Piragalathan-JAFFNA
31. K. Sivasubramaniyam-MULAITHIVU
32. S. Thayalan-WALIKAMAM
33. M. M. Anfas-VAVUNIYA SOUTH
34. M. J. Thushitha-VAVUNIYA SOUTH
35. A. Kayathri-KILINOCHCHI
36. N. Suthagar-VADAMARACHCHI
37. A. Santhanabavan-WALIKAMAM
38. A. Nimalakanthan-WALIKAMAM
39. T. Satkunarasa-VADAMARACHCHI
40. Y. Srikumar-JAFFNA
41. S. Kirushanth-VADAMARACHCHI
42. T. Sriranganathan-WALIKAMAM
43. K. Nimalanathan-VADAMARACHCHI
44. G. Piratheepan-MANNAR
45. R. Aravinthan-KILINOCHCHI
46. S. Sutharshini-WADAMARACHCHI
47. S. Mathanaruban-THENMARACHCHI
48. K. Thevakanthan-JAFFNA
49. R. Sasikumar-JAFFNA
50. N. Govintharaj -MADU
51. S. Jashothan-VAVUNIYA SOUTH
52. S. Thiruparan-WALIKAMAM
53. K. Saravanabavan-VAVUNIYA SOUTH
54. K. Kapilan-JAFFNA
55. L. Pakeerathan-KILINOCHCHI
56. R. Jegatheeswaran-JAFFNA
57. S. Mayooran-MULAITHIVU
58. S. Kesavan-ISLAND
59. P. Logaranjan-MULAITHIVU
60. P. Mayooran-WALIKAMAM
61. K. Thavaneeshan-WALIKAMAM
62. S.N. Aluthvala-VAVUNIYA SOUTH
63. R. Nithiyakala-JAFFNA
64. N. Sujeeraj-VAVUNIYA SOUTH
65. S.Sivarathees-WALIKAMAM
66.K. Senthilkumaran-VADAMARACHCHI
67. S. Baskararavivarman-JAFFNA
68. S. Balamurugan-VADAMARACHCHI
69. S. Karthiga-WALIKAMAM
70. S. Patpakunanathan-MANNAR
71. J. Uthayan-WALIKAMAM
72. A.J.J.A. Croos-MANNAR
73. S. Mukuntan-MULAITHIVU
74. R. Sivakumar-WADARACHCHI
75. V. Mayooran-MANNAR
76. R.M. Karunaratne-VAVUNIYA SOUTH
77. A. Jeyanimalan-VADAMARACHCHI
78. S. Tharshan-VAVUNIYA SOUTH
79. V. Kalyani-JAFFNA
80. S. Kirushanthan-KILINOCHCHI
81. A.Kumuthini-VAVUNIYA SOUTH
82. T. Mugunthan-VADAMARACHCHI
83. S. Thangavadivel-JAFFNA
84. S.J. Raveendrakumar-WALIKAMAM
85. T. Suthaharan-THENMARACHCHI
86. S. Sivanantham-KILINOCHCHI
87. S. Ketheeswaran-JAFFNA
88. K. Sivayogaladshumi-MULAITHIVU
89. J. Nithyananda-JAFFNA
90. K. Sivakumar-WADAMARACHCHI
91 . M. Pushpakumar-VAVUNIYA SOUTH
92. S. Arulananthan-WALIKAMAM
93. W. Yamini-VAVUNIYA NORTH
94. K. Kumanan-WALIKAMAM
95. S.E. Rajakumar-WALIKAMAM
96. T. Jegatheeswaran-WALIKAMAM
97. S. Varagi-VADAMARACHCHI
98. K. Suthakaran-WALIKAMAM
99. C. Ganenthiran-WALIKAMAM
100. V. Varatharajan-MULAITHIVU
101. V. Muraliharan-JAFFNA
102. P.E. Henry-JAFFNA
103. P. Thennakoon-VAVUNIYA SOUTH
104. I. Simith-WALIKAMAM
105. R. Thushanthan-VADAMARACHCHI
106. K. Ramanan-THUNUKKAI
107. V. Sasikumar-JAFFNA
108. T. Thushyanthan-WALIKAMAM
109. T.Baheerathan-VADAMARACHCHI
110. S. Kirushanthan-WALIKAMAM
111. G. Sivasuthan-THENMARACHCHI
112. B. Ullashanan-JAFFNA
113. S. Sasitharan-WALIKAMAM
114. R. Sritharan-JAFFNA
115. S.I. Gilani-JAFFNA
116. Y. Murali-WADAMARACHCHI
117. S. Tavaseelan-MULAITHIVU
118. J. Kamaleswaran-JAFFNA
119. K. Risikeshan-WALIKAMAM
120. K. Ilankumaran-THENMARACHCHI
121. T. Nagulendran-VADAMARACHCHI
122. B. Harishanth-JAFFNA
123. R.Saththiyeswaran-THENMARACHCHI
124. M. Robert-KILINOCHCHI
125. R. Ragini-THENMARACHCHI
126. K. Nagasutheeskaran-KILINOCHCHI SOUTH
127. J. Jeya Christo-WALIKAMAM
128. M. Sureshkaran -JAFFNA
129. M. Kugan-JAFFNA
130. R. Mannivannan-VADAMARACHCHI
131. B. Sathees-MANNAR
132. P. Ketheeswaran-JAFFNA
133. R. Nafees-VAVUNIYA SOUTH
134. K. Logasowntharan-VALIKAMAM
135. J. Thevakumar
136. P. Muralitharan-JAFFNA
137. D.J. Wijesingha-VAVUNIYA SOUTH
138. R. Subramaniam-THENMARACHCHI
139. B. Pathmanathan-KILINOCHCHI
140. K. Santhiramala-THUNUKKAI
141. C.A. J. Peiris-MANNAR
142. K. Raveenthiran-JAFFNA
143. J. S. V. Peiris-MANNAR
144. M. Kajeepan-THENMARACHCHI
145. R. Koneswaran-KILINOCHCHI SOUTH
146. T. Sandrakumar-KILINOCHCHI
147. K. Ajanthan-VAVUNIYA SOUTH
148. D.L. Pirashath-MANNAR
149. T. Kapilan-JAFFNA
150. K. Ravindran-WALIKAMAM
151. J.A.P. Jayakody-MULAITHIVU
152. M. Mariyaraja-KILINOCHCHI SOUTH
153. R. Krishnaraj-WALIKAMAM
154. K. Thushyanthan-WALIKAMAM
155. C. Sivagnanasekaram-WALIKAMAM
156. S. Rajeev- JAFFNA
157. R. Saravanabavan-JAFFNA
158. K. Satheeskumar- JAFFNA
159. K. Kajenthiran-MULAITHIVU
160. P. Suresh-VADAMARACHCHI
161. R. Jayapiragasam-KILINOCHCHI
162. T. Rameshwaran-VADAMARACHCHI
163. V. Sasikanth-VAVUNIYA SOUTH
164. S. Kogulan-WALIKAMAM
165. M. Kajan-JAFFNA
166. V. Sobana-WALIKAMAM
167. P. Jegan-VADAMARACHCHI
168. N. Sivakumaran-VADAMARACHCHI
169. S. Nishanthan-JAFFNA
170. S. Aravinthan -ISLAND
171. K. Kiyomar-VADAMARACHCHI
172. P.A. Jeyaraj-JAFFNA
173. T. Krishnakumar-THENMARACHCHI
174. S. Puvinayagan-THUNNUKKAI
175. R. Gowsalathevi-VADAMARACHCHI
176. M.M. Azim-MANNAR
177. S. Ilanthirayan-THENMARACHCHI
178. R. Mahilrajan-VADAMARACHCHI
179. G. Mathanagoban-THENMARACHCHI
180. M. Sasikaran-KILINOCHCHI
181. V. Mandalaswaran-KILINOCHCHI
182. P. Janaharan-VAVUNIYA SOUTH
183. T. Thivakaran-VAVUNIYA SOUTH
184. S. Sivashankar-WALIKAMAM
185. A.M. Akram-MANNAR
186. S. Hemaraatha-WALIKAMAM
187. Sister Jayaseeli Singaraja-MANNAR
188. S. Vickneswaran-WALIKAMAM
189. S. Kugachchandran-JAFFNA
190. M. Mathiraj-THENMARACHCHI
191. P. Kajakaran-THENMARACHCHI
192. S. Yajeevan-WALIKAMAM
193. T. Suthan-THENMARACHCHI
194. T. Sasirankan -WALIKAMAM
195. G. N. Fernando-MANNAR
196. M. Pathmaraja-JAFFNA
197. V. Ramesh-WALIKAMAM
198. S.A.Wesley-MANNAR
199. M.S.M. Jahan -VAVUNIYA SOUTH
200.I.S. Beham-VAVUNIYA SOUTH
201. L. Thanapriya-JAFFNA
202. N. Kobu-VAVUNIYA SOUTH
203. S. Vasantharuban-JAFFNA
204. N. Senthooran-VALIKAMAM
205. S. Raguragavan-JAFFNA
206. K. Balakumar -VALIKAMAM
207. B. Robinson-JAFFNA
208. I.D. Henry-JAFFNA
209. K. Premanath-JAFFNA
210. S. Viththagan-VALIKAMAM
211. S. Shathiyaseelan-MULAITHIVU
212. T. Premala-JAFFNA
213. S. Srikumar-JAFFNA
214. T. Guruparan-MANNAR
215. S.J.P. Dias-MANNAR
216. A. J. A. Donbosco-MULAITHIVU
217. S. Kantharupan-VAVUNIYA SOUTH
218. S. Sivaloganathan-JAFFNA
219. K. Sivarasa-VALIKAMAM
220. S. Kubenthiran-VADAMARACHCHI
221. J.S Sebasthiyampillai-JAFFNA
222. A. Sureshkanth-THENMARACHCHI
223. M. Selvathas-VADAMARACHCHI
224. T. Puspakanthan-VALIKAMAM
225. V. Pusparasan-MANNAR
226. K. Sasikumar-JAFFNA
227. A. Sakilan-JAFFNA
228. P. Senthuran-MULATIYANA
229. M.R. Sasinthirasingam-MULATIYANA
230. A. Kogularajan-VADAMARACHCHI
231. R. Sivanathan-JAFFNA
232. V. Sasikumar-VALIKAMAM
233. V. Alageswaran-VAVUNIYA SOUTH
234. S. Thileepan-JAFFNA
235. M. Srithangaraja-VALIKAMAM
236. S. Arulkumaran-JAFFNA
237. T. Ajooran-VALIKAMAM
238. K. Suresh-VALIKAMAM
239. P. Surenthiran-JAFFNA
240. K. Senthilraja-VADAMARACHCHI
241. S. Thineshkumar-VALIKAMAM
242. K. Sivaraj-VADAMARACHCHI
243. K. Manivannan-WALIKAMAM
244. J. Vickneswaran-VAVUNIYA SOUT
245. Sister R.S.L.M. Mariyathas-VAL
246. A. Kajeswara-JAFFNA
247. B. Balamurali-JAFFNA
248. T. Patreecia-JAFFNA
249. S. Nishanth-JAFFNA
250. T. Robashan-THUNUKKAI
251. R. Kajamugan-KILINOCHCHI SOUT
252. J. Paraneetharan-VADAMARACHC
253. V. Thayanandan-VAVUNIYA SOUTH
254. S. Mohanaraja-VAVUNIYA SOUTH
255. P. Jeganthan-JAFFNA
256. D. Ramnath-VAVUNIYA SOUTH
257. L. Kirupairatnam-MANNAR
258. N. Mohanathasan-JAFFNA
259. A. Kugaparan -WALIKAMAM
260. S. Sathees-WALIKAMAM
261. T. Lambotharan-THENMARACHCH
262. G. Sivathasan-THENMARACHCHI
263. T. Makinthan-VADAMARACHCHI
264. T. Senthilkumaran-WALIKAMAM
265. R. Prapeshkannan-VADAMARACH
266. M. Pirathipan-KILLINOCHCHI NOR
267. I. Suganya-MULAITHIVU
268. S. Premakumar-WALIKAMAM
269. J. Volvin-JAFFNA
270. M. Baheerathi-JAFFNA
271. V. Selvananthan-KILLINOCHCHI S
272. S. Koneswaran-KILINOCHCHI SOU
273. F.F. Faiz-KILINOCHCHI SOUTH
274. V. Jesuthasan-MADU
275. R. Sachchananthan-MANNAR
276. K. Manokaran-VAVUNIYA SOUTH
277. T. Kumarakulasingham-WALIKAM
278. C. Pararajasingam-ISLAND
279. T. Sananthanan-JAFFNA
280. P. Vijayakumar-ISLAND
281. S. Arumugadasan-THENMARACH
282. T. Jebasuthan-THENMARACHCHI
283. S. Sritharan-JAFFNA
284. V. Kapilakanthan-MULAITHIVU
285. A. Subaharan -WADAMARACHCHI
286. N. Jesunavaneethan-MADU
287. S. Sivakaran-THENMARACHCHI
288. T. Suthan-JAFFNA
289. K. Arulananthakumar-JAFFNA
290. A. Baheerathan-KIKINOCHCHI SOU
291. M.S. Nisar-VAUNIYA SOUTH
292. S. Ramees-VAUNIYA SOUTH
293. T. Ramesh-VAUNIYA SOUTH
294. S.V. Indrakala -MADU
295. S. Srikumar-VAUNIYA SOUTH
296. S. Jeyaranjan-VAUNIYA SOUTH
297. T. Sarathbabu-WALIKAMAM
298. R. Premananth-WALIKAMAM
299. K. Hamson-WALIKAMAM
300. L. Jeevakan-WALIKAMAM
301. T. Navathasan-WALIKAMAM
302. J. Jayakrishnan-WALIKAMAM
303. R. Mageshwararaj-WALIKAMAM
304. S. Sribala-WALIKAMAM
305. N. Thushyanthan-JAFFNA
306. G. Kumaran-KILINOCHCHI SOUTH
307. S. Murugathas-JAFFNA
308. K. Kugatheepan-WALIKAMAM
309. M.S.I. Gunawarthana-MULAITHIV
310. S. Kogilan-THENMARACHCHI
311. S. Pathmathasan-MADU
312. T. Kumanan-THENMARACHCHI
313. S. Senthilnathan-WALIKAMAM
314. T. Sivakumar-WALIKAMAM
315. K. Thushyanthan-JAFFNA
316. S. Sivakumaran-WALIKAMAM
317. M. A. C. Azmin -MANNAR
318. S. Sivakumar-MULAITHIVU
319. V.V.O. Tenny -MANNAR
320. T. Pushparatnam-THENMARACHCHI


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ளின் பெயர் விபரம்

AMAM
CHI
AMAM
NIYA SOUTH
athas-VALIKAMAM
AI
CHCHI SOUTH
AMARACHCHI
NIYA SOUTH
YA SOUTH
SOUTH
NAR
FNA
AM
MARACHCHI
ARACHCHI
RACHCHI
LIKAMAM
DAMARACHCHI
CHCHI NORTH
AMAM
NOCHCHI SOUTH
CHCHI SOUTH
UTH
ANNAR
YA SOUTH
m-WALIKAMAM
AND
A
ENMARACHCHI
ARACHCHI
AITHIVU
ARACHCHI
MADUJ
ACHCHI
-JAFFNA
OCHCHI SOUTH
UTH
UTH
UTH
OUTH
SOUTH
MAM
AMAM
M
MAM
AMAM
ALIKAMAM
FNA
HI SOUTH
AMAM
-MULAITHIVU
CHI
U
ACHCHI
KAMAM
AM
NA
AMAM
AR
VU
NMARACHCHI

321. S. Karshan-THENMARACHCHI
322. N. Pirathash-VAVUNIYA
323. R. Rishanthini-MADU
324. M.C. Colindran-JAFFNA
325. N. Aynkaran-WALIKAMAM
326. K. Balakumar -JAFFNA
327. S. Bawasayanthan-WALIKAMAM
328. T. Sriharan-WALIKAMAM
329. B.R. Akilanayagam-THENMARACHCHI
330. K. Srinanthagopan-WALIKAMAM
331. K. Sivarasa-WADAMARACHCHI
332. S. Suthan-THENMARACHCHI
333. H.M.C.B. Herath-VAVUNIYA SOUTH
334. S. Mayuran-JAFFNA
335. S. Sumanthiran-MULAITHIVU
336. G.G. Piratheepan-JAFFNA
337. T. Angasan-THENMARACHCHI
338. K. Kabilan-JAFFNA
339. S. Kamaladas-THENMARACHCHI
340. P. Ponraja-MULAITHIVU
341. S. Karunakaran-THENMARACHCHI
342. S. Srivathany-JAFFNA
343. S. Ratnajothy-WADAMARACHCHI
344. S. Sivanchaneyan-KILINOCHCHI SOUTH
345. T. Suthan-WADAMARACHCHI
346. S. Sivakumar-JAFFNA
347. P. Surenthiran-VAVUNIYA SOUTH
348. R. Vasanthakumar-THENMARACHCHI
349. S. Thumishan-VALIKAMAM
350. N. Ramesh-VALIKAMAM
351. T. Jeyakumar -VALIKAMAM
352. S. Suthaharan-VALIKAMAM
353. A. Inthirapala-VALIKAMAM
354. S. Sivakumar -VALIKAMAM
355. T. Atputharaja-JAFFNA
356. T. Tharmaseelan-THENMARACHCHI
357. C. Kokulakanth-VALIKAMAM
358. T. Sayanthan -JAFFNA
359. M. Yatheeshan-JAFFNA
360. N.Venesco-MADU
361. S.R.S. Rajarajeswaran-JAFFNA
362. K. Kokulan-THENMARACHCHI
363. H. B.A. Barringston-VAVUNIYA SOUTH
364. R. Rupakumar-KILINOCHCHI NORTH
365. R. Satsoruban-VAVUNIYA SOUTH
366. P. Pirathash-VAVUNIYA SOUTH
367. A.G. Jeyakumar-VAVUNIYA SOUTH
368. N. Senthooran-VAVUNIYA SOUTH
369. K. Uthayadas-JAFFNA
370. M. Kunasekaran-VAVUNIYA SOUTH
371. S. Kohilarajan-VALIKAMAM
372. T. Thasan-VALIKAMAM
373. K. Kailanathan-VALIKAMAM
374. V. Pirabhagaran-JAFFNA
375. K.T. Arudpiragasam-VADAMARACHCHI
376. S. Sanjeev-JAFFNA
377. I.Thyaparan-JAFFNA
378. K. Manoharan-VADAMARACHCHI
379. B. Jeyaram-JAFFNA
380. T. Rubaseelan-JAFFNA
381. B. Bakeerparan-VALIKAMAM
382. P. Thushyanthan-JAFFNA
383. R. Nixon-THUNUKKAI
384. M. Nelson-THENMARACHCHI
385. Bro. R. Vasudevan-VALIKAMAM
386. K. Ariharan-JAFFNA
387. A. Naguleswaran-KILINOCHCHI
388. N.F.M. Ikram-MANNAR
389. J. Chandraseelan-KILINOCHCHI SOUTH
390. Y. Vimalan-THENMARACHCHI
391. P. Ilanthirayan-THENMARACHCHI
392. V. Ragupathy -VADAMARACHCHI
393. K. Kanagalingam-KILINOCHCHI SOUTH
394. S. Sivakumar-VALIKAMAM
395. S. Sivakaran
396. J. Katheeskar-VALIKAMAM
397. P. Pathmaganthan-ISLAND
398. S. Muralimohan-VALIKAMAM
399. J.M.D. Padmalatha-VAVUNIYA SOUTH
400. M.Yogesparam
401. T. Satheeskumar-VAVUNIYA SOUTH

# எகிப்து - காசா எல்லை திறப்பு வெளிநாட்டவரும் வெளியேற அனுமதி



(காசா)

மத்திய கிழக்கில் எகிப்துக்கும் காசாவுக்கும் இடையிலான ராஃபா எல்லைப் பகுதி கடந்த மாதம் 7 ஆம் திகதிக்கு பிறகு நேற்றுமுன் தினம் புதன்கிழமை திறக்கப்பட்டது.

அதன் வழியாக 500இற்கும் மேற்பட்ட வெளிநாட்டினரும் இஸ்ரேல் தாக்குதலால் காயமடைந்த பாலஸ்தீனர்களும் காசாவைவிட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டதாக காசா எல்லைக் கடப்பு ஆணையம் அறிக்கை ஒன்றில் தெரிவித்ததாக அல் ஜசீரா ஊடகம் குறிப்பிட்டது.

முன்னதாக எல்லையைக் கடந்து எகிப்துக்குள் அனுமதிக்கப்படக் கூடிய மக்களின் பெயர் பட்டியலை அந்த ஆணையம் வெளியிட்டது. எகிப்து, இஸ்ரேல், ஹமாஸ் ஆகிய மூன்று தரப்புகளுக்கும் இடையில் கட்டார் நாட்டின் உதவியுடன் ஏற்பட்ட இணக்கத்தை அடுத்து அந்த எல்லை திறக்கப்பட்டது. காயமடைந்த பாலஸ்தீனர்களின் முதல் குழுவினர் மருத்துவ வாகனங்கள் மூலம் எகிப்துக்குள் நுழைந்ததாக எகிப்திய ஊடகம் தெரிவித்தது.

இஸ்ரேல் தாக்குதலால் காயமடைந்த 81 பேர் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் புதன்கிழமை எகிப்துக்குள் சென்றதாக பாலஸ்தீன எல்லை ஆணையம் கூறியுள்ளது.

இதனிடையே, ராஃபா எல்லையில் இருந்து 15 கி.மீ. தொலைவில் இருக்கும் எகிப்தின் சினாய் பகுதியில் ஒரு திடலில் கொட்டகைகள் போட்டு தற்காலிக மருத்துவமனைகள், எல்லை வழியாக கடந்து காசாவுக்குள் சென்று காயமடைந்தவர்களை ஏற்றிவர 40 மருத்துவ வாகனங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# 17 இலட்சம் ஆப்கானியர்களை வெளியேற்றும் பாகிஸ்தான்

(காபூல்)

பாகிஸ்தானில் சட்டவிரோதமாக 17 லட்சம் ஆப்கானியர்கள் தங்கியிருப்பதாக பாகிஸ்தான் அரசு தெரிவிக்கிறது.

இந்நிலையில் பாகிஸ்தானில் தங்கியிருக்கும் ஆப்கானியர்கள் அனைவரும் நவம்பர் 1 ஆம் திகதிக்கு முன் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். இல்லையெனில் கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள் என பாகிஸ்தான் அரசு அறிவித்தது. கடந்த மாத தொடக்கத்தில் வெளியான இந்த அறிவிப்புக்கு பிறகு 1 லட்சத்து 30 ஆயிரம் ஆப்கானியர்கள் பாகிஸ்தானை விட்டு வெளியேறியுள்ளதாக டோர்காம் மற்றும் சாமன் எல்லைச்சாவடி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பாகிஸ்தான் அரசின் கெடு முடிவுக்கு வந்தமையால் தடுப்புக் காவலில் வைக்கப்படலாம் அல்லது தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக ஆயிரக்கணக்கான ஆப்கானியர்கள் எல்லைச்சாவடிகளில் அணிவகுத்து நிற்கின்றனர்.

இந்நிலையில் தலிபான் அரசு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில ஆப்கானிஸ்தான் உள்நாட்டுப் போர் காலத்தில் லட்சக்கணக்கான ஆப்கானியர்களுக்கு அடைக்கலம் கொடுத்த பாகிஸ்தான் மற்றும் பிற நாடுகளுக்கு நன்றி எனவும்

பாகிஸ்தானை விட்டு வெளியேற யாரையும் கட்டாயப்படுத்த கூடாது. ஆப்கானியர்களுக்கு கூடுதல் அவகாசம் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது. (நி-5-6)

# போர்க்குற்றம் இழைக்கும் இஸ்ரேல் ஐ.நா சபை கடும் கண்டனம்

(ஜெனீவா)

அகதிகள் முகாம் மீது இஸ் ரேல் நடத்திய வான்வழித் தாக்கு தலில் அதிக எண்ணிக்கையி லான பொதுமக்கள் உயிரிழந்த தையும், அங்கு ஏற்பட்டுள்ள அழிவின் அளவையும் கருத்தில் கொண்டு, இவை போர்க்குற்றங்களுக்கு சமமான தாக்குதல்கள் என கருதுகிறோம் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்- ஹமாஸ் இடையேயான போர் நீடித்துவருகிறது. கடந்த காலங்களில் இருதரப் புக்கும் இடையில் ஏற்பட்ட 4 போர்களை விடவும் இந்த போர் அதிக உயிரிழப்புகளையும், கடுமையான மனிதாபி மான நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே காசாவில் மனிதாபிமான அடிப்படையில் போரை நிறுத்த வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் பொதுசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும், இதனை திட்டவட்டமாக நிராக ரித்த இஸ்ரேல், ஹமாசை முழு வதுமாக ஒழிக்கும் வரை ஓய மாட்டோம் என சபதம் செய்து தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் காசாவில் அகதி முகாம்மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை 195 ஆக அதிகரித்துள்ளது. இந்த தாக்குதலை முஸ்லிம் நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளன. ஹமாஸ் தளபதி ஒருவரை இல க்கு வைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என இஸ்ரேல் அறிவித்துள்ளது. இந்த தாக்குதலை ஐ.நா வும் கண்டித்துள்ளது. (நி-5-6)

# டில்லியில் டீசல் பேருந்துகள் உள்நுழைய தடைவிதிப்பு

(டில்லி)

அதிகரித்து வரும் காற்று மாசு அளவை கருத்திற் கொண்டு, இந்திய நகரமான புது டில்லிக்குள் டீசல் பேருந்துகள் நுழைவதைத் தடை செய்ய இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்திய சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால் ராய் தலைமையில் டில்லி செயலகத்தில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தின் முடிவில் இந்த முடிவு எட்டப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

மேலும் அதிக வெப்பம் உள்ள இடங்களில் ஒரு கிலோ மீற்றர் சுற்றளவில் கட்டுமான பணிகளை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

காற்று தர மேலாண்மை ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, இந்த புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு, இது சரியாக செயற்படுகிறதா என்பதை கண்டறிய 18 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், டீசல் பேருந் துகள் டில்லிக்குள் நுழைவது நிறுத்தப்பட்டதைக் கருத்தில் கொண்டு, பயணிகளுக்கு எந்த சிரமமும் ஏற்படாத வகையில் மின்சார பேருந்துகளை தங்கள் டிப்போக்களில் இருந்து இயக்க அனுமதிக்குமாறு டெல்லி சுற்றுச்சூழல் அமைச்சர் மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டதாக கூறப்படுகிறது.

தலைநகரில் மோசமான காற்றின் தரத்தை கருத்தில் கொண்டு, அடுத்த 15-20 நாட்களில் காற்றின் தர குறியீட்டு வாசிப்பு முக்கியமானதாக இருக்கும் என்று இந்திய விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனான சென்றலைட்ஸ்



இந்திரா பிறொன்சியல் ரொனர்மேன்ற்-2023 தொடரை கைப்பற்றியது சென்றலைட்ஸ் அணி.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று களத்தடுப்பை தெரிவு செய்தனர்.

சென்றலைட்ஸ் அணி 48.3 ஓவர்களில் 236 ஓட்டங்களை பெற்றனர்.

டார்வின்-65, சாரங்கன்-52, கௌதமன்-28, ஜெரிக் துஷாந்-21 ஓட்டங்களை பெற்றனர்.

பவித்தன்9.3 ஓவர்களில் 48 ஓட்டங்களை கொடுத்து 4குகப்பிரியன் 10 ஓவர்களில் 23 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.



அதிகூடிய ஓட்டம்
கௌதமன்

237 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கிளிநொச்சி இந்து இளைஞர் கழக அணி 43.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 170 ஓட்டங்களை பெற்றனர். பார்த்தீபன்-51, பிரதீஸ்-45 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் ஜெரிக் துஸாந் 5 ஓவர்களில் 15 ஓட்டங்களை கொடுத்து 4, நிரோஜன் 6.3 ஓவர்களில் 26 ஓட்டங்களை கொடுத்து 2,அஜே,கௌதம் தலா 1 இலக்கினை கைப்பற்றினர்.

தொடரின் முதலாம் இடத்தை சென்றலைட்ஸ் அணியும், 2 ஆம் இடத்தை கிளிநொச்சி இந்து இளைஞர் அணியும் வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக் கொண்டனர்.விசேட பரிசில்களில் சென்றலைட்ஸ் அணியை சார்ந்த கௌதன் ஆகக் கூடிய ஓட்டங்களை பெற்ற வீரராகவும் , வவுனியா யங்ஸ்ரார் அணியை சார்ந்த அபிஸன் ஆகக் கூடிய இலக்குகளைக் கைப்பற்றிய வீரராகவும், அதே அணியை சார்ந்த இளையராஜ் ஆகக் கூடிய பிடி எடுப்புகளை பிடித்த வீரர்களுக்கான வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டன. (நி-5-6)



ஆட்ட நாயகன்
ஜெரிக் துஸாந்

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2957

ராகவன்

ஜப்பான்காரன் வேலை செய்யலைன்னா செத்துடுவான்...



நம்ம சொந்தக்காரன் நம்ம சந்தோஷமா இருந்தா செத்துடுவான்...

ஜெயக்குமார்

ஏண்டா நேற்று முழுவதும் டல்லாயிருந்தே?
நேற்று புடவை வாங்கிறேன்னு போய் என் தர்மபத்தினி ரூ.20000 க்கு வாங்கிட்டு வந்திட்டா
சரி இன்னிக்கு ஏன் சந்தோஷமா இருக்கே?
அவ அந்த புடவைய உன் பொண்டாட்டிக்கிட்ட காட்டுறதுக்கு போயிருக்கா....



நேசமணி

நா வெளிநாட்டில நல்ல சம்பளம் வாங்கிறேன்.
அதெல்லாம் இருக்கட்டும் கல்யாணம் பண்ணிட்டு என் பிள்ளைய வெளிநாட்டுக்கு எப்ப கூப்பிட்டு போவியா அத மட்டும் சொல்லு..



கோபாலு

தீபாவளி பர்ச்சசுக்காக போறேளா?
இல்ல தீபாவளி பர்சஸ் பண்றதுக்கு கடன் வாங்கப் போறேன்...
அதுக்குள்ளயா?



ஆதவன்

என்னப்பா இட்லி ஜில்லுன்னு இருக்குது?
வெளியே எப்படி போட்டிருக்கு?
ஆறிய பவன்
அப்புறம் என்ன சூடாவா இருக்கும் கொய்யால...



சிவசாந்தன்

மத்த பண்டிகைக்குன்னா 1000-2000 இருந்தா போதும்.
அதே தீபாவளியா இருந்தா 10000 இருந்தா கூட பத்தாது.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5150 போதை மாத்திரைகளுடன் நபரொருவர் மன்னாரில் கைது




(மன்னார்)

மன்னாரில் நீண்ட கால மாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் ஒருவரிடம் இருந்து 5150 போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருடன் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது மன்னார் தாழ்வுபாடு பகுதியில் இருந்து தாராபுரத்திற்கு இப்போதைப் பொருளை கொண்டு வந்த வேளையில் போதை மாத்திரையுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். இப்போதை மாத்திரைகள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டு வந்துள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளையும் மேலதிக விசாரணைக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-285)



மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு "வாசிப்பை நேசிப்போம் புத்தகங்களை நண்பர்கள் ஆக்குவோம்" எனும் தொனிப் பொருளில் நேற்று வியாழக்கிழமை புத்தக கண்காட்சியும் விற்பனையும் அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

(படம்:-ஜோசப்நயன்)

# கண்டாவளை பிரதேச செயலகத்தில் காணிப்பத்திரம் வழங்கி வைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை காணி உரிமைப் பத்திரம் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கான காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் தலைமையில், குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும்கடற்றொழில்அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு குறித்த பயனாளிகளுக்கான காணி அளிப்பு பத்திரங்களை வழங்கி வைத்தார். (நி-5-6-315)



முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச சபை , AVALON Resort ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் Green Layer Environmental Organization இன் பங்களிப்புடன் முல்லைத்தீவு நகரில் ஓர் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் "Green Mullai" எனும் தொனிப்பொருளில் 5000 மரக் கன்றுகள் நடுகைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (படம்:-சதீஸ்)

# கசிப்பு உற்பத்தி முற்றுகை 2800 லீற்றர் கோடா மீட்பு



(தருமபுரம்)

மாயவனூர் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி செய்யும் இடத்தை முற்றுகையிட்டு அங்கிருந்து 2,800 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இராமநாதபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறித்த பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக இராமநாத பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய குறித்த முற்றுகை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (நி-5-6-316)

# கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பெருவிழா

(தருமபுரம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப்பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட திறன் விருத்தி நிலைய கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகமும் பண்பாட்டுப் பேரவைத் தலைவரான ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வளாகம் யாழ்.பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட பீடாதிபதி திருமதி.சிவசாந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.(நி-5-6-316)

# அழகுபடுத்தும் மரங்களை மோதித்தள்ளிய டிப்பர்

(நெளுக்குளம்)

வவுனியா நகரில் மணிக்கூட்டு கோபுரம் பகுதியை அழகுபடுத்தும் மரம் மீது டிப்பர் மோதி இரண்டு மரங்கள் மற்றும் விளம்பரப் பதாகைகள் என்பனவற்றிற்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதையடுத்து குறித்த டிப்பர் மற்றும் சாரதியை வவுனியா பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

வவுனியா மணிக்கூட்டுக் கோபுரம் பகுதியை அழகுபடுத்தும் திட்டத்தை கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வவுனியா வர்த்தக சங்கம் மேற்கொண்டு நகரில் விலையுயர்ந்த அழகுபடுத்தும் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று அதி காலை மணிக்கூட்டுக் கோபுரம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக யாழ்.வீதியிலிருந்து கண்டி வீதி நோக்கிப் பயணித்த டிப்பர் வீதியில் அமைக்கப்பட்ட விளம்பர பதாகைகளை ஊட றுத்து கொண்டு இரண்டு அழகுபடுத்தும் மரங்களுக்கும் சேதங்களை ஏற்படுத்தியது.

இதையடுத்து டிப்பர் மற்றும் சாரதியை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு சேதப்படுத்தியவற்றை சீர் செய்து கொடுக்குமாறும் பொலிஸாரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (நி-5-6-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 300 | 450 |
| தக்காளி | 250 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 100 | 150 | 140 |
| கோவா | 280 | 220 | 240 | 300 |
| கரட் | 350 | 380 | 350 | 400 |
| பூசணி | 80 | 80 | 60 | 100 |
| புடோல் | 250 | 200 | 120 | 240 |
| வாழைக்காய் | 200 | 180 | 160 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 340 | 300 | 350 |
| பாகற்காய் | 400 | 450 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 220 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 250 | 350 |
| லீக்ஸ் | 200 | 300 | 200 | 300 |
| பீற்றூட் | 140 | 140 | 150 | 200 |
| கறிமிளகாய் | 500 | 300 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 300 | 300 |
| போஞ்சி | 400 | 500 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 320 | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1600 | 1800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 400 | 500 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 250 | 350 | -- | 200 |
| முள்ளங்கி | 80 | 160 | -- | 50 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 50 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 325





குந்தவை, நான் இங்கே இருப்பதனால் இந்தப் பழம் பெரும் சோழ ராஜ்யம் சின்னாபின்னமாகாமல் காப்பாற்றி வருகிறேன். நேற்றிரவு நாடகம் ஆடிக்கொண்டிருந்தபோது என்ன நடந்தது என்பதை யோசித்துப் பார்! நிலா மாடத்தின் முகப்பிலிருந்து நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தேன். நாடகத்தை நடுவில் நிறுத்தி விடலாமா என்று கூடத் தோன்றியது"

"தந்தையே! இது என்ன? நாடகம் மிக நன்றாக இருந்ததே! சோழ குலப் பெருமையை எண்ணி என் உள்ளம் பூரித்ததே! எதற்காக நிறுத்த விரும்பினீர்கள்? நாடகத்தில் எந்தப் பகுதி தங்களுக்குப் பிடிக்காமலிருந்தது?"

"நாடகம் நன்றாகத்தானிருந்தது, மகளே! அதில் ஒரு குற்றமும் நான் காணவில்லை. நாடகம் பார்த்தவர்களின் நடத்தையைப் பற்றியே சொல்கிறேன். கொடும்பாளூர்க் கட்சியும், பழுவேட்டரையர் கட்சியும் எழுப்பிய போட்டி கோஷங்களை நீ கவனிக்கவில்லையா?"

"கவனித்தேன், அப்பா!"

"நான் ஒருவன் இங்கு இருக்கும்போதே இவர்கள் இப்படி நடந்து கொள்ளுகிறார்களே! நான் இல்லாவிட்டால் என்ன ஆகும் என்று சிந்தித்துப் பார்! நான் தஞ்சாவூரை விட்டுக் கிளம்பிய தட்சணமே இரு கட்சியாருக்குள்ளும் சண்டை மூளும். கிருஷ்ண பரமாத்மாவின் சந்ததிகள் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டு அழிந்தது போல், இவர்களும் அழியும் போது இந்த மகாசாம் ராஜ்யமும் அழிந்து விடும்"

"அப்பா! தாங்கள் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தில் சர்வாதிகாரச் சக்கரவர்த்தி. பழுவேட்டரையர்களும் சரி, கொடும்பாளூர் வேளிரும் சரி, தங்கள் காலால் இட்டதைத் தலையால் செய்யக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் அத்துமீறி நடந்தால் அவர்களுடைய அழிவை அவர்களே தேடிக்கொள்கிறார்கள். தாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?"

"மகளே! சென்ற நூறு வருஷமாக இந்த இரு குலத்தோரும் சோழ சாம்ராஜ்யத்துக்கு இணையில்லா ஊழியம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய உதவியின்றிச் சோழ ராஜ்யம் இப்படிப் பல்கிப் பெருகியிருக்க முடியுமா? அவர்கள் அழிந்தால் இராஜ்யத்துக்கும் அது பலவீனந்தானே?"

"அப்பா! அந்த இரு கட்சியில் ஒரு கட்சிக்காரர்கள் தங்களுக்கு விரோதமாகச் சதி செய்யும் துரோகிகள் என்று தெரிந்தால்.."

சுந்தர சோழர் குந்தவையை வியப்போடு உற்றுப்பார்த்து, "என்ன மகளே, சொல்கிறாய்? எனக்கு விரோதமான சதியா? யார் செய்கிறார்கள்?" என்று கேட்டார்.

"அப்பா! தங்களுடைய உண்மையான ஊழியர்களாக நடித்து வருகிறவர்கள் சிலர், தங்களுக்கு எதிராக இரகசியச் சதி செய்கிறார்கள். தங்களுடைய புதல்வர்களுக்குப் பட்டமில்லாமல் செய்துவிட்டு வேறொருவருக்குப் பட்டம் கட்டச் சதி செய்து வருகிறார்கள்."

"யாருக்கு? யாருக்கு மகளே? உன் சகோதரர்களுக்குப் பட்டம் இல்லையென்று செய்து விட்டு வேறு யாருக்குப் பட்டம் கட்டப் பார்க்கிறார்கள்?" என்று சுந்தர சோழ சக்கரவர்த்தி பரபரப்புடன் கேட்டார்.

குந்தவை மெல்லிய குரலில், "சித்தப்பா மதுராந்தகனுக்கு, அப்பா! நீங்கள் நோய்ப் படுக்கையில் படுத்திருக்கையில் இவர்கள் இப்படிப் பயங்கரமான துரோகத்தைச் செய்கிறார்கள்." என்றாள்.


உடனே சுந்தர சோழர் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து, "ஆகா அவர்களுடைய முயற்சி மட்டும் பலித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்றார்.

குந்தவைக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"தந்தையே! இது என்ன, தாங்கள் பெற்ற புதல்வர்களுக்குத் தாங்களே சத்துரு ஆவீர்களா?" என்றாள்.

"இல்லை என் புதல்வர்களுக்கு நான் சத்துரு இல்லை. அவர்களுக்கு நன்மை செய்யவே விரும்புகிறேன். இந்தச் சாபக்கேடு உள்ள ராஜ்யம் அவர்களுக்கு வேண்டியதில்லை. மதுராந்தகன் மட்டும் சம்மதித்தால்.."


"சித்தப்பா சம்மதிப்பதற்கு என்ன? திவ்யமாகச் சம்மதிக்கிறார். நாளைக்கே பட்டங் கட்டிக்கொள்ளச் சித்தமாயிருக்கிறார். அம்மாதிரி தாங்கள் செய்யப் போகிறீர்களா? என் தமையனின் சம்மதம் கேட்க வேண்டாமா?" (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மணியும் மக்களும்

(நேற்றைய தொடர்ச்சி..)



ஒருமுறை ஒரு திசையிலிருந்தும் மறுமுறை வேறுதிசையிலிருந்தும் மணியோசை கேட்டது. இதற்குமேல் இங்கு இருக்கக்கூடாது என்று அனைவரும் கிளம்பினர். மோட்டுவு பட்டுலுவை பத்திரமாக வீடு கொண்டுவந்து சேர்த் தார்.

பட்டுலுவிற்கு தூக்கம் வரவில்லை. மோட்டுவை எழுப்பி, "அப்பா எனக்கு மறுபடியும் அந்த காட்டுக்கு போகணும். மணியை கண்டு பிடிக்க என்கிட்ட ஒரு ஐடியா இருக்கு என்றாள். மோட்டுவோ, "இப்போ போக முடியாது பட்டுலு, தூங்கு" என்றார். விடியும் வரை காத்திருந்த பட்டுலு, அப்பா விடம் அடம்பிடித்து காட்டுக்கு கூட்டி சென்றாள். அவர்கள் போன கொஞ்சநேரத்தில் மணியோசை மெதுவாக கேட்டது. காட்டின் உட்புறம் நோக்கி சென்றனர். மணி யோசை அதிகமாக கேட்கவே ஓசை வரும் திசையை நோக்கி ஓடினாள் பட்டுலு. மோட்டுவும் பின்னால் ஓடினார். பட்டுலு ஒரு இடத்தில நின்றாள். அவள்முன் ஒரு குரங்கு கூட்டம் ஒரு முரசு, தங்கமணி மற்றும் சில பொருட்களை கொண்டு விளையாடிக்கொண்டு இருந்தன. அதை பார்த்து மோட்டுவும் பட்டுலுவும் சிரித்தனர், இவ்வளவு நாள் குரங்குகள் தான் மணியோசை எழுப்பி மக்களை பயமுறுத்தியதை எண்ணி. பின்பு சில பழங்களை கொண்டு குரங்குகளை திசை திருப்பி அனுப்பிவிட்டு தங்கமணியை மீட்டனர்.

நேராக சென்று கிராமமக்களிடம் தங்க மணியை கொடுத்து நடந்த நிகழ்வுகளை விவரமாக கூறினார்கள், மோட்டுவும் பட்டுலுவும். கிராம மக்கள் பட்டுலுவின் அறிவையும் துணிச்சலையும் கண்டு வியந்தனர். எப்படியம்மா உனக்கு இது தோன்றியது என கேட்டனர். அதற்கு, ஸ்கூல்ல மிஸ் சொன்னாங்க, எதுக்கும் பயப் படக்கூடாது.

அறிவை பயன்படுத்தி நடக்கனும்னு. அத தான் நான் செஞ்ச என்று சொன்னாள். கிராமமக்கள் பட்டுலுவை பாராட்டினார்கள்.

மோட்டுவும் தனது மகளை கொஞ்சியவாறு வீட்டிற்கு நடந்தார். அன்றிலிருந்து கிராமமக்கள் பகுத்தறிவோடு நடந்து கொண்டனர். கதை புடிச்சுதா குட்டீஸ். நீங்கள் எதற்கும் பயப்படாம அறிவைக் கொண்டு ஒரு வேலையை செய்யவேண்டும், நம்ம பட்டுலு மாதிரி சரியா. பகுத்தறிவு விளக்கை ஏற்றி, மூட நம்பிக்கை இருளை அகற்றுவோம்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில்
இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இரண்டு பெரிய நாடுகளிடம் அடிவாங்கப் போகும் ஒரு சிறிய நாடு

இலங்கையின் அமைவிடம் அதன் வாஸ்து என்பன அந்த நாட்டை அமைதியாக வைத்திருக்காதென்பதைச் சுட்டி நிற்கின்றது.

அதனாலோ என்னவோ முன்னையிட்ட தீ முப்புரத்தில் என்று பாடிய பட்டினத்தடிகள்; பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே என்றார்.

ஆக, இலங்கை எரியூட்டப்பட்ட நாடு என்பதை எடுத்துரைக்கும் பட்டினத்தடிகள் நீதி தவறியமையினால் – செங்கோலாட்சி பிறழ்வு கண்டமையால், இலங்கை எரிக்கப்பட்ட தென்பதை மறைமுகமாக உரைத்து நிற்கின்றார்.

அதாவது முப்புரத்தை எரியூட்டியவன் சிவன். இலங்கையை எரியூட்டியவன் அனுமானாயினும் அதற்கு மூலகாரணன் இராமன்.

ஆக, அவதார புருஷராகிய இராமபிரான் இலங்கையை எரிப்பதென்றால் அங்கு அறம் இருக்கவில்லை. அதர்மம் மேலோங்கி இருந்ததென்பதே பொருளாம்.

நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் யுகம் தோறும் அவதாரம் எடுப்பேன் என்பது தான் கிருஷ்ண அவதாரத்தின் நோக்கம்.

ஆக, அவதார புருஷராகிய இராமபிரான் இலங்கையை எரியூட்டுகிறார் என்றால், இலங்கை எரியூட்டப்பட வேண்டிய நாடு என்பதுபோல அதன் உட்பொருள் அமையும்.

இதுதவிர, இராம – இராவண யுத்தம் இலங்கையில் நடைபெற்றபோது இராவணன் விழுப்புண் அடைந்து உயிரிழந்தான் என்பது மட்டும் வரலாறு அல்ல.

மாறாக இராமபிரானின் தம்பி இலட்சுமணனும் போர்க்களத்தில் காயமுற்று நினைவிழந்தான்.

அதாவது இலங்கையில் நல்லவர்களும் துன்பப்படுவர் என்பது இதன் பொருள்.

ஏன்? கடவுள் அவதாரமான இராமபிரானுக்கு இலங்கையால் தானே துன்பம் நேர்ந்தது.

எனவே இதிலிருந்து இலங்கை மண்ணில் கொடியவர்களால் நல்லவர்களும் வதைபடுவர்.

இதுதான் அந்த நாட்டின் விதி என்று அறுதியிடுவதை நிராகரிக்கக்கூடிய சம்பவங்கள் ஏதேனும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதை நாம் கூறும்போது, இஃது இப்போது எதற்காக? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம். அவ்வாறு கேட்டால், இப்போது இலங்கை இந்தியாவையும் சீனாவையும் ஏமாற்றுகிறது.

நாங்கள் இந்தியாவுடன் என்று கூறுகின்ற தென்னிலங்கை ஆட்சியாளர்கள், சீனாவின் கப்பலை நாட்டுக்குள் வர அனுமதிக்கின்றனர்.

இங்குதான் இலங்கையின் அமைவிடமும் வாஸ்துவும் ஆரோக்கியமாக இல்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

எதுஎவ்வாறாயினும் நிலைமை முற்றினால் இலங்கை என்ற சிறிய நாடு இந்தியா, சீனா என்ற மிகப்பெரிய இரண்டு நாடுகளிடமும் அடிவாங்குவது தவிர்க்க முடியாத தலைவிதியாகிவிடும்.

# மதுவினால் ஒரு நாளில் 40 பேர் உயிரிழக்கின்றனர்

### மது மற்றும் போதைப் பொருள் தகவல் மையம்

**(கொழும்பு)**

**மதுபான பாவனையால் இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 40 பேர் அகால மரணமடைவதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.**

மது அருந்துவதால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 15,000 பேர் உயிரிழப்பதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

மதுவின் வருமானத்தை விட மதுவினால் நாட்டுக்கு ஏற்படும் பொருளாதார சேதம் அதிகம் என ஆய்வுகள் கூறுகிறது. கடந்த 2015 ஆம் ஆண்டு மதுவின் வருமானம் 10,5,234 மில்லியன் ரூபாவாக இருந்த போது அதில் மதுவால் அரசுக்கு ஏற்பட்ட பொருளாதார சேதம் ஆண்டு 119660 மில்லியன் ரூபாய் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் படி, மது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது மற்றும் 17 நிலையான வளர்ச்சி இலக்குகளில் 14 இலக்குகளுக்கு மதுபானம் தடையாக செயற்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த வகையான மதுபானமும் மனித உடலுக்கு நல்லதல்ல என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதுடன், மதுபானம் புற்றுநோய், சிரோசிஸ், சிறுநீரகம் மற்றும் இதய நோய்கள் போன்ற பல நோய்களை நேரடியாக பாதிக்கிறது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாலை விபத்துகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், குழந்தைகள் துஷ்பிரயோகம் போன்றவற்றுக்கு மதுபானம் முக்கிய காரணமாகிவிட்டதாக குறித்த மையம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## கிராம அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்பு; போட்டிப் பரீட்சை விரைவில்- பிரதமர்

(வவுனியா)

கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்பட்டு மூன்று மாதங்களுக்குள் நியமனங்கள் பூர்த்தி செய்யப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். சுமார் 3000 கிராம அலுவலர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

மேலும் .சட்டரீதியாக அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தேர்வில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். வவுனியா மாவட்ட உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் வவுனியா மாவட்ட செயலகத்தில் "புதிய கிராமம் - புதிய நாடு" தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் இதனைத் தெரிவித்தார். (நி-5-6)

## 1.5 பில்லியன் டொலர் முதலீட்டில் சுத்திகரிப்பு ஆலை

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டையில் ஒரு சுத்திகரிப்பு ஆலையை அமைப்பதற்காக, சீனாவின் சினோபெக் நிறுவனம், 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற மிகப் பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டை மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுவரையில், சீன முதலீடான கொழும்பு போர்ட் சிட்டி, இலங்கையில் மிகப்பெரிய நேரடி முதலீட்டு திட்டமாக கருதப்படுகிறது. அம்பாந்தோட்டை என்பது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சீனா வின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட ஆழ்கடல் துறைமுகமாகும். இருப்பினும், துறைமுகம் 2017 ஆம் ஆண்டில் சீன அரசுக்கு சொந்தமான 'சீனா மெர்ச்சன்ட்ஸ்' நிறுவனத்திற்கு 99 ஆண்டுகளுக்கு 1.12 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது.

அண்மையில் இடம் பெற்ற சீன விஜயத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சினோபெக் குழுமத்தின் தலைவர் மா யோங் ஷெங் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் சினோபெக் ஏற்கனவே இலங்கையின் சில்லறை எரிபொருள் சந்தையிலும் பிரவேசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## சீனியின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த விசேட பண்ட வரி உடன் அமுலாகும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒரு கிலோ கிராம் சீனிக்கு 25 சதமாக இருந்த வரி 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சீனி மீது விதிக்கப்பட்டிருந்த விசேட பண்ட வரி அதிகரிக்கப்பினால் சீனியின் விலையும் விரைவில் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-60)

## சில மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமம் தற்காலிகமாக இரத்து

(கொழும்பு)

எஞ்சிய வரியை செலுத்த தவறிய ஐந்து மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனங்களுக்கு மதுபான உற்பத்தி மற்றும் அதனை விநியோகம் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டதாக கலால் ஆணையாளர் நாயகம் சமன் ஜயசிங்க தெரிவித்தார்.

நீண்டகாலமாக நிலுவைத் தொகையை செலுத்தாத நிறுவனங்களின் வருடாந்த அனுமதிப் பத்திரம் ஒக்டோபர் 30ஆம் திகதியுடன் காலாவதியாகியுள்ளது.

ஐந்து மதுபான உற்பத்தி நிலையங்களில் மது உற்பத்தி நிறுத்தப்பட்டாலும், மதுபான உற்பத்தி நிலையங்கள் அதிகளவில் உள்ளதால் சந்தையில் மதுபானத்திற்கு தட்டுப்பாடு ஏற்படாது என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** கார்கில்ஸ் மானிப்பாய் கொமர்ஷல் வங்கி- மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவிலடி- மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய் சந்தை, மேதர், மானிப்பாய்மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, நெபாட் வலைத் தொழிற்சாலை, உயர் தொழிநுட்பவியல் கல்வி நிறுவனம்- குருநகர், கட்டிட திணைக்கழம் - கடற்கரை வீதி, ஏ.வி.வீதி, கொழும்புத்துறை, கடற்கரை வீதி பழைய பூங்காவீதி, கொழும்புத்துறை- நெடுங்குளம் வீதி, சுவாமியார் சந்தி, டேவிட் வீதி, கடற்கரை வீதி - குருநகர், மணியந தோட்டம், பாசையூர், உதயபுரம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கௌதாரிமுனை, வெட்டுக்காடு (கௌதாரிமுனை), விநாசியோடை (கௌதாரிமுனை) கிருஷ்ணநகர் மணவாழப்பட்டு முறிப்பு, சின்னசாளம்பன் (14 ஆவது மைல் கல்) ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**
**"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்"**
*-தோமஸ்ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

27



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

கம்பளைக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் யாழ்ப்பாணத்து அரசன் தான் பெற்ற வெற்றியைப் பதிவு செய்திருப்பதால், சிங்கையாரியனின் படைகள் மலை நாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிக் கம்பளை வரை சென்று அதன் அரசனையும் தோல்வியுறச்செய்திருக்கக்கூடும்.

### மடவலைக் கல்வெட்டு

மடவலைக் கல்வெட்டு என்பது, இலங்கையின் தென்பகுதியில் உள்ள மடவலை என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சிங்களக் கல்வெட்டு. இது கம்பளையில் இருந்து அரசாண்ட மூன்றாம் விக்கிரமபாகுவுக்கும், மார்த்தாண்டம் பெருமாள் என்பவனுக்கும் இடையிலான ஒரு உடன்படிக்கையைக் குறிக்கிறது. இந்த உடன்படிக்கை, விக்கிரமபாகுவின் ஆட்சிக்குட்பட்ட சில இடங்களின் சுங்க நிலைகளில் மார்த்தண்டம் பெருமாள் ஆட்களை நியமிப்பது பற்றியது. இது யாழ்ப்பாண அரசுக்கும், கம்பளை அரசுக்கும் இடையிலான ஒப்பந்தம் எனக் கருதப்படுகிறது.

இங்கே குறிப்பிடப்பட்ட மார்த்தாண்டம் பெருமாள், யாழ்ப்பாணத்து இளவரசனான மார்த்தாண்டன் எனத் தெரிகிறது. இவனே பின்னர் மார்த்தாண்ட சிங்கையாரியன் என்னும் பெயரில் யாழ்ப்பாண அரசனானவன். ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் தந்தையான வரோதய சிங்கையாரியன் யாழ்ப்பாணத்தின் அரசனாக இருந்தான். இந்த ஒப்பந்தமும், கோட்டகமைக் கல்வெட்டும் முன் குறித்த போரின் தொடர்ச்சியாகவே இடம் பெற்றிருக்க வேண்டும். எனின், கோட்டகமைக் கல்வெட்டில் குறிக்கப்படும் சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியனே எனலாம்.

வரலாற்று பாடநூல்களில் தமிழர்களது உண்மையான வரலாறு மறைக்கப்பட்டுள்ளது - ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பாராளுமன்றத்தில் கூறியவை.

அந்நியர்கள் இந்த நாட்டை ஆக்கிரமித்தபோது சிங்கள மக்களைப் போன்றே தமிழ் மக்களும் அந்நியர்களுக்கெதிரான போராட்டங்களை நடத்தியுள்ளனர். குறிப்பாக, போர்த்துக்கேயரின் ஆட்சி ஏற்படுவதை கோட்டை மன்னன் வித்தியா பண்டாரனும், யாழ்ப்பாண மன்னன் முதலாம் சங்கிலியனும் ஒன்றிணைந்து எதிர்த்துப் போராடினர்.

அதே போன்று, வன்னி சிற்றரசின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனும், கண்டி மன்னனும் இறுதிவரை ஒன்றிணைந்து ஆங்கிலேயருக்கெதிராகப் போராடினர்.

இறுதியில், 1811இல் பண்டார வன்னியனை வெற்றி கொண்டதன் பின்னரே 1815இல் ஆங்கிலேயரால் கண்டியை வெற்றிகொள்ள முடிந்தது. இவை பற்றிய போதிய விளக்கங்கள் இன்றியும், உண்மை வரலாறுகள் மறைக்கப்பட்ட நிலையிலுமே எமது மாணவர்களுக்கான வரலாற்றுப் பாடநூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அவர்களிடம் சுட்டிக் காட்டியுள்ளதுடன், இவற்றை நிவர்த்தி செய்து தமிழர்களின் உண்மை வரலாறுகளைப் பாட நூல்களில் இடம்பெறச் செய்யுமாறு வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் அவர்கள், நிகழ்ந்த நிகழ்வுகளைத் தொகுத்துக் கூறல் வரலாறாகும். அதில், நல்லவை, கெட்டவை, சாதகமானவை, பாதகமானவை என சகலதும் இருக்கலாம். எனினும், பக்கம் சாராது உள்ளதை உள்ளபடி கூறுவதே உண்மை வரலாறாகும். எமது நாட்டில் நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை இளமை முதல் கற்றுணர்ந்து கொள்வதற்காகவே வரலாற்றுப் பாடம் பாடசாலைகளில் கட்டாயமாகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சிங்கள-தமிழ் மக்களுக்கு நீண்டகால வரலாறு உண்டு. சிங்கள மன்னர்களும், தமிழ் மன்னர்களும் எமது பண்டைய இராசதானிகளை ஆட்சி செய்துள்ள நிலையில், சிங்கள மன்னர்களது படைகளில் தமிழ் படை வீரர்களும், தமிழ் மன்னர்களது படைகளில் சிங்களப் படை வீரர்களும் இருந்துள்ளனர்.

பொலனறுவை அரசு வீழ்ச்சி கண்டதன் பின்னர், சிங்கள இராசதானி தெற்கு நோக்கி தம்பதெனிய, யாப்பஹூவ, குருநாகல், கம்பளை, கோட்டை என இடமாறிய வரலாறு பாடநூல்களில் விரிவாகக் காணப்படுகின்ற நிலையில், அதே கால கட்டத்தில் வட இலங்கையில் கலிங்கமான், சாவகன், வன்னியர், ஆரிய சக்கரவர்த்திகள் போன்றவர்களது இராசதானிகள் தோன்றிய வரலாறுகள் மறைக்கப்பட்டுள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் அரசால் வெளியிடப்பட்ட வரலாற்றுப் பாடநூல்களில் அரிதாக, தமிழர் மற்றும் தமிழ் மன்னர்களது ஆட்சி பற்றிக் கூறப்பட்டிருந்தபோதிலும், அந்த விடயங்களும் அண்மைக் கால வரலாற்று பாடநூல்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அதே நேரம் இதுவரைக் காலமும் எமது வரலாற்றுப் பாடநூல்கள் சிங்கள வரலாற்று ஆசிரியர்களால் சிங்கள மொழியில் எழுதப்பட்டவை என்றும், அந்நூல்களே தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அப்படியே மொழிபெயர்க்கப்பட்டவை என்றும், இதில், தமிழ் வரலாற்று ஆசிரியர்களின் பங்களிப்பு எழுத்துப் பிழைகளைச் சரி பார்ப்பது மட்டுமே என்றும் தெரிய வருகிறது.

இந்தநிலை மாற்றப்பட வேண்டும். தமிழ் வரலாற்று பாடநூல்களை தயாரிப்பதற்கென தகுதிவாய்ந்த தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட வேண்டும். அதே நேரம் எமது நாட்டில் இடம்பெற்றுள்ள உண்மையான வரலாற்று நிகழ்வுகளை மூடி மறைக்காமல் - திரிபு படுத்தாமல் பாடநூல்களில் உள்ளடக்கப்பட வேண்டும். தமிழர்களின் பண்டைய இருப்பை வெளிப்படுத்தக் கூடிய ஆட்சிகள், ஆட்சியாளர்கள் தொடர்பிலான விடயங்கள் எவையும் பாடசாலை மாணவர்களுக்கான வரலாற்று பாடநூல்களில் தெளிவாக இடம் பெறாமையானது பாரிய குறைபாடாகும். அத்தகைய குறைபாடுகளுடன் கூடிய வரலாறே எமது மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் வளர்க்கப்பட வேண்டுமென்பதில் அக்கறை காட்டப்படுகின்ற இந்த ஆட்சியில் இந்த வரலாற்றுப் பாடத் திட்டமானது அதற்கெதிரான விளைவுகளையே கொண்டுதரக் கூடிய வகையில் அமையப் பெற்றிருக்கின்றன.

இவ்வாறான மூடி மறைப்புகள் - திரிபுபடுத்தல்கள் என்பன பாடசாலை பாடங்களின் ஊடாக எமது மாணவர்களுக்கு புகுத்தப்படுகின்ற நிலையில், எமது நாட்டு மாணவர்கள், இளம் சந்ததியினரிடையே தாங்கள் இந்த நாட்டிலிருந்தும் அந்நியப்பட்டவர்கள் என்ற எண்ணக் கருவே ஆழமாக மனதுள் பதிந்துவிடுகின்றது. இவ்வாறான உணர்வுகளுடன் வளரும் எமது இளம் சந்ததியினரிடையே நாட்டுப் பற்றினையும், தேசிய நல்லிணக்க சிந்தனைகளையும் எதிர்பார்க்க இயலாது.

இந்த நாட்டு மக்களிடையே மேலும், மேலும் கசப்புணர்வுகளை வளர்க்கும் முகமாகவே இவ்வாறான பாடத் திட்டத் தயாரிப்புகள் காணப்படுவதாகத் தெரியவருகிறது. இது மிகுந்த அவதானத்தைச் செலுத்த வேண்டிய விடயமாகும். எமது நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை பலமிக்கதாகக் கட்டியெழுப்ப வேண்டுமானால், அனைத்துத் தரப்பு மக்களும் அதை உளப்பூர்வமாக ஏற்கக்கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். சிங்கள மாணவர்கள் இந்நாட்டின் தமிழர் மற்றும் ஏனைய இனத்தவர் பற்றிய வரலாற்றையும், பண்பாட்டையும், தமிழர் மற்றும் ஏனைய இனத்தவர் சிங்கள மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் தெரிந்து கொள்ள வழியேற்படுத்த வேண்டும் என செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாண நாணயங்கள்

இலங்கையில் கிடைத்த நாணயங்கள் உள்நாட்டு,வெளிநாட்டு நாணயங்கள் எனப்பிரிக்கலாம். இதில் இந்திய,கிரேக்க,ரோம, அரேபிய, சீன மற்றும் போர்த்துக்கேய, டச்சு மற்றும் ஆங்கிலேய நாணயங்கள் வெளி நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்தவை. இவற்றுள் இந்திய சிறப்பாக தமிழக நாணயங்கள் வகையிலும் தொகையிலும் அதிகமாகக் கிடைத்துள்ளன. உள்நாட்டில் வெளியிடப்பட்ட நாணயங்களில் கி.பி 13ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 1619இற்கும் இடையில் வட இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்கள் வெளியிட்ட சேது என்னும் பெயர் பொறித்த நாணயங்களைத் தவிர ஏனைய நாணயங்கள் சிங்கள மன்னர்களால் வெளியிடப்பட்ட தென்ற கருத்து ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் தொட்டு தற்காலம் வரை நிலவுகிறது. இதற்கு பௌத்த, சிங்கள மக்களோடு தொடர்புடைய பெயர்கள், குலக்குறியீடுகள், சின்னங்கள் போன்றவை சான்றாக காட்டப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் கி.பி. 2ஆம் நூற்றாண்டிலிருந்து சிங்கள மன்னர்கள் நாணயங்களை வெளியிடத் தொடங்கியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

"கஹபான" இலங்கையின் மிகப் பழைய நாணயமாகும். இவை சமஸ்கிருதத்தில் புராண எனவும் ஆங்கிலத்தில் எல்டிங்கஸ் எனவும் அழைக்கப்பட்டிருக்கிறது. வட்டம், சதுரம், செவ்வகம் மற்றும் நீண்ட செவ்வகம் போன்ற வடிவங்களைக் கொண்டது."சுவாஸ்திக நாணயங்கள்" ஒரு பக்கத்தில் நடக்கும் யானையொன்றின் உருவத்தையும், அரை பிறை அடையாளங்கள் மற்றும் தாது கோபுரங்கள் , ஸ்வஸ்திகவையும், சதுரக் கோட்டுடன் கூடிய மூன்று கிளைகளைக் கொண்ட அரச மரமொன்றையும் கொண்டிருக்கும்.செப்பு உலோகத்திலிருந்து தயாரிக்கப்பட்ட பிடரி மயிர் இல்லாத சிங்க நாணயங்கள் ஒரு பக்கத்தில் சிங்க உருவமும் மறு பக்கத்தில் சிறிய மூன்று அல்லது நான்கு புள்ளிகளும் கொண்டு காணப்படும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு வைத்திய...

இருப்பதையும், அது தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும் அதைத் தடுப்பதற்குரிய வழி வகைகளைப் பற்றியும் ஆட்சியாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இருப்பினும் இதுவரை எந்தவிதமான சாதகமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் உரிய தரப்பினால் மேற்கொள்ளப்படாத நிலையில் நாம் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

நாளை (இன்று) முன்னெடுக்கப்பட உள்ள இந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தின்போது வட மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்திய சாலைகளிலும் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் இடம்பெற மாட்டாது. மேலும் மகப்பேற்று மருத்துவ சேவைகள், சிறுவர் மருத்துவ சேவைகள், புற்றுநோய் சிகிச்சைகள், சிறுநீரக செயலிழப்புக்கான சிகிச்சைகள் இடம்பெறும்.

அரசாங்கமானது எமது முன்மொழிவுகளினூடாக தற்சமயம் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முன் வர வேண்டும். அவ்வாறு தீர்வை வழங்கி வைத்தியர்களை நாட்டில் தக்க வைத்து இலவச சுகாதார சேவையை பேணுவதற்கு தவறும் பட்சத்தில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் ஆகிய நாங்கள் எமது போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டி ஏற்படும் என்றுள்ளது. (ம-7)

## எரிபொருட்களின்...

தும் அதிகரித்தால், இந்த நாட்டிலுள்ள 85 வீதமான வெளிநாட்டு பணியாளர்கள் பாதிக்கப்படலாம்.

இதன்மூலம் எரிபொருட்களின் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## வரி அதிகரிப்பால்...

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன் படிக்கையின்படி, 2023 மார்ச் 31ஆம் திகதி அரசாங்கத்தினால் பெறப்பட வேண்டிய வரி வருமானம் 650 பில்லியன் ரூபாயாகும். ஜூன் 31 நிலைவரப்படி 1,300 பில்லியன். இந்த இரண்டு இலக்குகளையும் அடைய அரசாங்கம் தவறியதே IMF இன் இரண்டாம் தவணையை நாம் பெறாததற்கு முக்கிய காரணம்.

இப்போது, அர்ந்த இலக்கை அடையு குறுக்குவழியாக VAT வரியை 18% ஆக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு தொடக்கத்தில் 8% ஆக இருந்த VAT வரி தற்போது 18% ஆக உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இரண்டு மடங்குக்கும் மேல் அதிகரிப்பு. எதிர்மறை பொருளாதாரம் உள்ள நாட்டில், மறைமுக வரிகளில் பெரிய அதிகரிப்பு இல்லை. அப்படிச் செய்வதால் பொருட்களின் விலை அதிகரித்து விலை உயரும். தேவை குறைகிறது. சிறுதொழில்கள் மூடப்பட்டு வேலையின்மை மோசமாகி வருகிறது.

தற்போது, மேற்கு ஆசியாவில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக, எண்ணெய் விலை உயர்வால், உலக அளவில் பணவீக்கம் ஏற்பட்டு, உலகப் பொருளாதாரம் சுருங்கி வருகிறது. மறைமுக வரிகளை அதிகரித்து அதை மோசமாக்காமல், அதைக் குறைக்க அரசு பாடுபட வேண்டும். இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கான வாய்ப்பை இழக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் உலகின் பெரும்பாலான நாடுகளில் மறைமுக வரிகளைப் போலவே நேரடி வரிகளும் உள்ளன. இலங்கையில் உள்ள மறைமுக வரிகளில் நான்கில் ஒரு பங்கு மட்டுமே நேரடி வரிகள். அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதல் காரணம், பெரும்பான்மையான வரி செலுத்துவோர் வரி செலுத்துவதில்லை. வரி விலையை விரிவுபடுத்தும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

இரண்டாவதாக, இலங்கையில் அதிக லாபம் ஈட்டும் நிறுவனங்களில் பெரும்பாலானவை வரி செலுத்துவதில்லை. முதலீட்டுச் சபையிடமிருந்து நீண்ட கால வரிச் சலுகைகள் பெறப்பட்டுள்ளன. அவ்வாறு சலுகைகளைப் பெற முடியாதவர்கள் நிதி அமைச்சைக் கைப்பற்றி 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்தித் திட்டச் சட்டத்தின் கீழ் அமைச்சுப் பத்திரத்தை சமர்ப்பித்து பெரும் வரிச்சலுகைகளைப் பெற்றனர். அதன்பிறகு, வரி இலக்குகளை எட்ட முடியாமல், அப்பாவி ஏழை மக்களின் தோள்களில் வரிச் சுமை சுமத்தப்படுகிறது.

இது அரசின் பட்டப்பகல் கொள்ளை. குறிப்பாக வரி செலுத்த வேண்டிய மிகப்பெரிய நிறுவனங்கள் அமைச்சரவை மூலம் வரிச்சலுகைகளைப் பெறுவதற்காக அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்கின்றன. அமைச்சரவையின் மூலம் வரிச் சலுகைகளைப் பெற வேண்டும் என்ற ஆசையால் ஊழல் தூண்டப்படுகிறது.

மேலும் அரசு நேரடி வரிகளை அதிகரிக்க முயற்சிப்பது வணிக லாபத்தின் மீது அல்ல. மாறாக தனிநபர் வருமான வரிகள் மீதுதான். குறிப்பாக தொழில் வல்லுநர்கள் மற்றும் நிர்வாகிகள் தங்கள் வருமானத்தை மறைக்க முடியாது. ஏனெனில் ஊதியம் வழங்கும் நிறுவனங்களே அவற்றை வெளியிடுகின்றன. எனவே, பல நாடுகள் தனிநபர்களிடம் கார்ப்பரேட் வரியை விட குறைவான வரி விகிதத்தை வகுலிக்கின்றன. ஆனால், நமது அரசு பெரும் வணிகர்களிடம் அதே சதவீத வரியை ஊதியம் பெறுபவர்களிடம் இருந்து வசூலிக்கிறது என்றார். (ம-7)

## திருக்...

படுமானால் அதனை இந்தியா சாதகமாகப் பரிசீலித்து அதற்கு உதவும்" இவ்வாறு உறுதிமொழி வழங்கினார் இந்திய நிதி அமைசசர் நிர்மலா சீதாராமன்.

நேற்றுக்காலை திருக்கோணேஸ்வரரின் புனித பூமியில் வைத்து இந்த உறுதிமொழியை அவர் வழங்கினார்

மூன்று நாள் பயணமாக இலங்கை வந்துள்ள நிர்மலா சீதாராமன் நேற்றுக் காலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார். ஆலய நிர்வாகிகள் அவரை வரவேற்று உரையாடினர். அகில இலங்கை இந்துமா மன்றத்தின் துணைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அப்போது ஆலய நிர்வாகிகள்சார்பில் ஆலய புனரமைப்புத் தொடர்பில் ஒரு கோரிக்கையை முன்வைத்தார். போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டு ஒல்லாந்தரால் சூறையாடப்பட்ட திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை இன்று ஓரளவு பேணிப் பாதுகாக்கின்றோம். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயத்தையும் மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கருங்கற்களால், பெருங்கோயிலாகப் புனரமைத்துத் தர இந்தியா முழு உதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால்பாக்லே, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் திருக்கோணேஸ்வரம் ஆலய நிர்வாகத் தலைவர் துசியந்தன் உட்படப் பலரும் அந்த உரையாடலின்போது உடனிருந்தனர். "எமது கோரிக்கையைச் செவிமடுத்த இந்திய நிதி அமைச்சர், மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்று கோணேஸ்வரத்தையும் புனரமைக்க உதவ முடியும் என்று தெரிவித்தார்.

அதற்கான முன்னேற்பாடுகள், முறைப்படியான கோரிக்கைகள், அனுமதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிர்மலா சீதாராமன் உற்சாகத்தோடு தெரிவித்துள்ளார். இது எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது" என்று கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார். (ம-7)


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3528
சீட்டிழுப்பு திகதி 02.11.2023
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 17 52 60 78
Y 67901
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2023.11.02
சீட்டிழுப்பு இலக்கம் 1316
O 10 53 61 65 O
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Double Chance 04797

லக்கி 7 Lucky 7
திகதி 02.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0112
L7 இலக்கம் 2 5
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 4 8 5 9 3 6

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.02
சீட்டிழுப்பு இலக்கம் 595
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 14 40 52 56 மகரம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1634
F 16 03 63 67 78
50691

மஹஜன சம்பத
திகதி 2023/11/02
சீட்டிழுப்பு இலக்கம் 5286
ஆங்கில எழுத்து V
வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 9 1 1 4 7
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2260
வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.11.02
தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 14 42 51 65
ஆங்கில எழுத்து Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,061,676/-
DLB

சனிதா Shanida
திகதி 2023.11.02
வெற்றி வாரம் 4421
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 01 28 42 49
ஆங்கில எழுத்து R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,603,132.00
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3972
வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.02
தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 22 44 53
கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,204,256/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 10 06 32 45 49
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1436
திகதி 2023.11.02 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 460,013,824.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 642
திகதி 2023-11-02
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 03 44 49
விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசுதொகை ரூ. 12,973,888.00
DLB DEVELOPMENT LOTTERIES
Web: www.dlb.lk

ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2086
வர்ணம் : இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.11.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,251,368/-
வெற்றி இலக்கங்கள் 15 19 25 67
ஆங்கில எழுத்து T


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வீத சலுகையுடன் பயிற்சிப் புத்தகங்கள்

(கொழும்பு)

பாடசாலை அதிபர்களின் பரிந்துரையின் பேரில் பாடசாலை மாணவர்களுக்கு 30 வீத சலுகை விலையில் இன்று முதல் பாடசாலைப் பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளதாக அரச அச்சக சட்டப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத்தின் தலைவர் நிமல் தர்மரத்ன தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் யோசனைக்கு அமைவாக, இறுதி வாடிக்கையாளருக்கு பயிற்சிப் புத்தக விற்பனைக்கான சலுகை வழங்கும் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்களை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, பாடசாலை தலைமையாசிரியரின் பரிந்துரைக் கடிதத்துடன் வரும் மாணவருக்கு விற்பனை அரச அச்சக சட்டப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபன கிளைகளில் இருந்து இந்த தள்ளுபடியைப் பெறலாம்.

இந்த பயிற்சி புத்தகங்கள் நன்கு முடிக்கப்பட்ட அட்டை மற்றும் GSM 60 காகிதத்துடன் தயாரிக்கப்படுகின்றன எனவும் அவை தற்போதைய சந்தையில் கிடைக்கும் பயிற்சி புத்தகங்களுக்கு நிகரான தரத்துடன் தயாரிக்கப்படுகின்றன எனவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார். (ம-7)


**IELTS - New Batch ஆரம்பம்**
இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17620)

**O+ குருதி அவசரம் தேவை**
வழங்கக் கூடியவர்கள் தயவு செய்து பின்வரும் இலக்கங்களிற்கு தொடர்பு கொள்ளவும். (17648)
077 025 7098
077 057 9552

**அமெரிக்க லொத்தர் விசா**
★ இன்னும் 4 நாட்கள் மட்டுமே
★ பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
★ அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. (17621)
077 755 4528

**போட்டிப் பரீட்சை நேரடி வகுப்புக்கள்**
◆ வடமாகாண ஆசிரியர் தெரிவு
◆ திறந்த பல்கலை சட்டமாணி
◆ சுங்க உதவி அத்தியேட்சகர் வளவாளர்கள்
T.தவசேகர், P.கமலதாசன்
ஆரம்பம் ஞாயிறு(5/11) 9.00am
பிரதி ஞாயிறு 9.00am - 2.30pm
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்) (17652)
076 688 3394
077 526 5344

**காணி விற்பனைக்கு**
இருபாலை சந்தியில் இருந்து 700m தூரத்தில் இருபாலை வீதியில் 32 வயற்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விலை ஒரு பரப்பு 530,000/=
(17645) சு.சிவகுமார்
T.P: 077 181 5027
Whatsapp : +4915754710178

**VILLAGE HOTEL பஸ் சேவை JAFFNA EXPRESS**
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17484)
T.P: 077 544 8503

**சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்**
முல்லைத்தீவு, கிளிநொச்சி, பூநகரி, பளை பிரதேசங்களில் வாழ் மக்கள் தங்களிடமுள்ள பழுதடைந்த விவசாய, மின்சாதன, பவர்ரூல்ஸ், கொங்கிறீற் மிக்சர், றமர் மற்றும் சிறு கைத்தொழில் இயந்திரங்கள் அனைத்தையும் நாளை சனிக்கிழமை (04.11.2023) இலவசமாக பழுது பார்த்து தருவதோடு இச் சேவை ஒவ்வொரு மாதத்தின் முதல் சனிக்கிழமைகளிலும் இடம்பெறும் மேலும் எம்மிடமுள்ள அனைத்து விற்பனை சாதனங்களின் விலைகளையும் நினைக்க முடியாத விலைக்கழிவுடன் பேரம் பேசி பெற்றுக்கொள்ளலாம்.
வாருங்கள் பாருங்கள் வாங்கிச் செல்லுங்கள் (17623)
ஆர்க் என்ரபிறைசஸ் 021 228 2020
A9, வீதி, பரந்தன் சந்தி. 071 535 7800

**CANADA VISITOR VISA**
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7548)
0777-068-777
49A சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

**அமெரிக்க லொத்தர் விசா இரண்டே நாட்கள்**
LOADING
பதிவுகள் நிறைவடைகின்றன
0768226244
55000 இலவச விசாக்கள்
நீங்களும் அமெரிக்காவில்...
V2 Travels
V2 TRAVELS
0777464777 0743900952 0768226337 0768226240 0777068777 0764550670 0764550675 0768226230
0768226243 0776697960 0764550675 0768226338 0764550671 0777718322 0777726322 0743900351
0777720322 0764550674 0776699882 0768226342 0768226236

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 19 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும் 3 1/2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km, திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம் (17650)
077 814 7389,
077 986 5457


# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 26 • 05 • 1933

உதிர்வு 30 • 10 • 2023

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் Roggwill Switzerland ஐ வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் செல்லையா அபிமன்னராஜா

(அபிமன்யு கராஜ் உரிமையாளர் சண்டிலிப்பாய்)

நிஜம் இன்றி நிழலில்லை – என்பது
பொய்த்துவிடும் படியாய் – உம்
நிஜம் இங்கு இல்லை என்றபோதும்
எம் நெஞ்சத்தில் என்றும் மறையாத
நிழலாகி மாறாத நினைவாகி
எம்மோடு வாழும் உம் உருவம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவைப் பகிரும்
சத்தியசீலன் குடும்பம், செல்வம் குடும்பம்,
ஸ்ரீதரன் குடும்பம் 071 622 2529 (C-7543)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org